ஆரம்பக்கல்வி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை

AUG 1959 ... MADRAS

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்,
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3.] [தனி இதழ் அணா 4

மலர் 20 } ஜூலை 1959 { இதழ் 7

அப்போதே சொன்னார்கள்! அப்படியே ஆயிற்று!!

தமிழ் நாட்டில் உள்ள உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் ஊதியத்தை, தமிழ் நாட்டு அரசாங்கத்தார், சென்ற மே மாதம் வரையில், அந்தந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு அனுப்பி வந்தார்கள். அந்த நிர்வாகிகள் அந்தத் தொகையை வாங்கி அவர்களுடைய பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு அளித்து வந்தார்கள்.

நிர்வாகிகள் மூலம் ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிப்பது என்கிற இந்த ஏற்பாடு நெடுங்காலமாக நடைமுறையில் இருந்து வந்திருக்கிறது. இந்த ஏற்பாட்டின் காரணமாக ஆரம்ப ஆசிரியர்கள் தங்களுடைய ஊதியத்தை ஒவ்வொரு மாதத்திலும் முதல் வாரத்தில் தவறாமல் பெற்று வந்தார்கள். எத்தனையோ சமயங்களில் அரசாங்கத்திடமிருந்து நிர்வாகி

களுக்கு மேற்படி ஊதியத் தொகை உரிய காலத்தில் வராமல் இருந்திருக்கிறது. இரண்டு மாதங்கள் மூன்று மாதங்கள் நான்கு மாதங்கள் தாமதமாகி அந்தத் தொகை நிர்வாகி களுக்குக் கிடைத்திருக்கிற சந்தர்ப்பங்கள் பற்பல உண்டு. இப்படியெல்லாம் ஆசிரிய ஊதிய உதவித் தொகை அரசாங் கத்திடமிருந்து நிர்வாகிகளுக்குத் தாமதமாகி வந்திருந்தாலும் அந்தக் காரணத்தால் நிர்வாகிகள், ஆசிரியர்களின் ஊதியத் தைத் தாமதப்படுத்தி அளித்ததில்லை. அரசாங்கத் தொகை உரிய காலத்தில் கிடைக்காவிட்டாலும், யாரிடமிருந்தாவது கடன் வாங்கி, அந்தக் கடன் தொகையைக் கொண்டு உரிய காலத்திலேயே ஊதியத்தை ஆசிரியர்களுக்கு அளித்து வந் திருக்கிறார்கள் பள்ளி நிர்வாகிகள்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் இந்த ஏற்பாடு சாலச் சிறந்ததாகவும் நற்பயன் விளைப்பதாகவும் ஒளி வீசித் திகழ்ந்தது என்பதை எவரும் மறுத்தல் இயலாது. இந்த ஏற்பாட்டின் காரணமாகத் தமிழ் நாட்டு ஆரம்ப ஆசிரியர் களிடையே அதிருப்தியோ வெறுப்புணர்ச்சியோ இருந்ததாக யாரும் கூற முடியாது. அதற்கு மாறாக இந்த ஏற்பாட்டைத் தமிழ் நாட்டு ஆரம்ப ஆசிரியர்கள் வாயாரப் பாராட்டி மன மார வரவேற்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டிருந் தனர் என்பது நாடறிந்த உண்மையாகும்.

யாரோ இரண்டொரு நிர்வாகிகள் அரசாங்கத்திட மிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு உரிய காலத்தில் ஆசிரியர்களுக்கு ஊதியத்தை அளிக்காமல் இருந்திருக்கலாம். இல்லையென்று நாம் கூறவில்லை. ஆனால் அத்தகைய இழிமதி படைத்த நிர்வாகிகள் விரல்விட்டு எண்ணக் கூடிய இரண் டொருவரே இருந்திருப்பர். ஏனைய நிர்வாகிகள் அத்தனைப் பேரும், உரிய காலத்தில் ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிப் பது என்பதைத் தங்களுடைய முதற் பெருங் கடமையாகக் கொண்டு பணியாற்றி வந்தார்கள். இது உண்மை வெறும் புகழ்ச்சி இல்லை.

நிர்வாகிகள் மூலம் ஊதியம் அளிப்பது என்கிற இந்த ஏற்பாட்டால் ஏதாவது தீமை இருந்திருந்தால் அந்தத் தீமை கடுகின் அளவினது என்று கூறலாம். ஆனால் இந்த ஏற்பாட் டால் விளைந்துவந்த நன்மையோ மலையின் அளவினது. தீமை மிக மிகக் குறைவு, நன்மை மிகமிக அதிகம்.

இந்த மறுக்க முடியாத உண்மையைத் தமிழ் நாட்டு அரசாங்கத்தார் நன்ருக அறிவார்கள். அறிந்திருந்தும், ஏனோ தெரியவில்லை, இந்த ஜுன் மாதத்திலிருந்து இந்த ஏற்பாடு நடைமுறையில் இராது என்றும், இதற்கு மாருக, ஒவ்வோர் ஆரம்ப ஆசிரியருக்கும் அரசாங்கத்தாரே ஊதியத்தை நேரடியாக மணியார்டர் மூலம் அனுப்பும் புதிய ஏற்பாடு நடைமுறைக்கு வரும் என்றும தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள் சில மாதங்களுக்கு முன்ருல் அறிவித்தார்கள்.

ஏப்ரல் மாத இறுதியில் சென்னை நகரில் கூடிய சென்னை மாநில உதவி பெறும் பள்ளி நிர்வாகிகள் மாநாட்டினர், இந்தப் புதிய ஏற்பாட்டை ஆரத்தீர அலசி ஆராய்ந்து பார்த்து விட்டு, புதிய ஏற்பாட்டால் ஆசிரியர்களுக்கும் சரி நிர்வாகிகளுக்கும் சரி, எத்தகைய நன்மையும் விளையாது என்பதையும், அளவற்ற தீமையே உருவாகும் என்பதையும், ஆகவே இந்த விபரீத ஏற்பாட்டை உடனடியாகக் கைவிட்டு விட்டுப் பழைய ஏற்பாட்டைத் தொடர்ந்து வைத்திருப்பதே ஆட்சியாளர்களின் கடமை யென்பதையும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டித் திட்டவட்டமானதோர் தீர்மானததை நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பி வைத்தார்கள்.

ஏப்ரல் மாத இறுதியில் உதவி பெறும் பள்ளி நிர்வாகிகள் தெரிவித்த அந்தக் கருத்துக்கள் முற்றிலும் நியாயமானவை என்னும் உண்மை இப்போது மிக நன்ருக விளங்கிவிட்டது.

புதிய திட்டத்தின்படி ஜுன் மாதத்திற்கு உரிய ஊதியத்தை, அரசாங்கத்தார், ஆரம்ப ஆசிரியர்களுக்கு, மணியார்டர் மூலம் ஜுலை 1 அல்லது 2-ம் தேதியில் கிடைக்கும்படி அனுப்பி வைத்திருக்க வேண்டும். ஆனல் தமிழ் நாட்டில் உள்ள பெரும்பாலான ஆரம்ப ஆசிரியர்களுக்கு அந்த ஊதியத் தொகை, ஜுலை 1-ம் தேதி கிடைக்க வில்லை; 2-ம் தேதி யன்றும் கிடைக்கவில்லை; 10-ம் தேதியிலும் கிடைக்க வில்லை. 20-ம் தேதியில்கூடக் கிடைக்கவில்லை. சென்னை நகரத்தில் பல பள்ளிகளில் 25-ம் தேதி வரையில்கூட அந்த ஊதியம் வந்து சேரவில்லை.

ஜுலை முதல் வாரத்தில் கிடைக்கவேண்டிய ஊதியத் தொகை ஜுலை இறுதி வாரத்தில்கூட வந்து சேரவில்லை யென்ருல், அம்படிச் சேர்ப்பிக்க முடியாத ஒரு திட்டத்தைச் சிறந்த திட்டம் என்ருே, சீர்மிகுந்த ஏற்பாடு என்ருே, போற்றிப் புகழவேண்டிய பொன்னுன முறை என்ருே எப்படிப் பாராட்ட முடியும்?

அரிசி—பருப்பு—எண்ணெய்—விறகு—துணி - சர்க்கரை போன்ற எல்லாப் பண்டங்களின் விலைகளும் எட்டிப் பிடிக்க முடியாத உயரத்தில் பறந்து கொண்டிருக்கிற காலம் இது. அன்றாட வாழ்க்கையை நடத்திச் செல்வதற்குத் தேவையான பண்டங்களின் விலைகள் அத்தனையும் ஏற்கெனவே அதிகமாக இருக்கின்றன என்பது மட்டுமல்ல. மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. யானை விலை குதிரைவிலை என்கிறார்களே அப்படிப்பட்ட நிலையிலே விலைகள் உயர்ந்து ஓங்கி நிற்கின்ற காலம் இன்றைய சகாப்தம். இப்படிப்பட்ட சகாப்தத்தில், ஆரம்ப ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுகிற மிகக் குறைந்த ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கைக் கடலில் குடும்பப் படகை ஓட்டிச் செல்வது மிக மிகக் கடுமையான செயலே ஆகும். ஊதியம் முழுவதும் முதல் தேதியன்று கிடைத்தால்கூட, அந்த ஊதியத்தைக் கொண்டு குடும்பச் செலவைச் சரிக்கட்டுவது இயலாத செயலாக இருக்கும்போது, மாதம் முடிகிற தறுவாயில்கூட ஊதியம் வராமல் இருந்தால், ஆரம்ப ஆசிரியர்களின் குடும்பங்கள் எத்தகைய வேதனைக்கு ஆளாகித் தத்தளிக்கும் என்பதை நாம் எடுத்துச் சொல்லவா வேண்டும்?

பழைய ஏற்பாடு நடைமுறையில் இருந்திருந்தால் ஊதியம் முழுவதும் முதல் வாரத்திலேயே ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கிடைத்திருக்கும். அப்படித்தான் இத்தனை ஆண்டுகளாகக் கிடைத்துவந்தது. கிடைக்கும்படிச் செய்துவந்தனர் பள்ளி நிர்வாகிகள்.

ஆனால் புதிய ஏற்பாடு நடைமுறைக்கு வந்த பிறகோ......

ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் வந்து சேரவில்லை! தத்தளிக்கின்றனர் ஆசிரியப் பெருமக்கள். தத்தம் குடும்பங்களை நடத்திச் செல்வதற்குரிய வழிவகை புரியாது விழிகளில் நீர் பெருக்கி நிற்கின்றனர். விபரீதமும் விசித்திரமும் நிறைந்த இப்படிப்பட்ட ஓர் ஏற்பாட்டைக் கொண்டுவந்து ஆரம்ப ஆசிரியர்களைத் தவிக்கவைப்பதால் அரசாங்கத்திற்கு என்ன நன்மை என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

மணியார்டர் மூலம் நேரடியாக ஊதியத்தை அனுப்புகிற புதிய ஏற்பாட்டால் ஆசிரியர்களுக்கு உரிய காலத்தில் ஊதியம் கிடைப்பதில்லை என்பது மட்டுமல்ல. குறிப்பிடத்தக்க அளவு பண நஷ்டமும் அவர்களுக்கு ஏற்படுகிறது. மணியார்டரை அனுப்புவதற்குரிய கழிவுத் தொகையை (கமிஷன்) அரசாங்கத்

தார் தங்களுடைய செலவாக ஏற்றுக் கொள்ளவில்லை. ஆசிரியர்களுக்கு அனுப்பவேண்டிய ஊதியத் தொகையிலிருந்து அந்தக் கழிவுத் தொகையைக் கழித்துவிட்டு மிச்சத் தொகையைத் தான் ஆசிரியர்களுக்கு அனுப்பிவைக்கிறார்கள். இதன் காரணமாக ஒவ்வோர் ஆரம்ப ஆசிரியரும், ஒவ்வொரு மாதமும் தன்னுடைய ஊதியத்தில் குறைந்தது ஒரு ரூபாயை இழக்கவேண்டியிருக்கிறது. ஆகவே புதிய ஏற்பாட்டினால், ஆரம்ப ஆசிரியர்கள் ஆண்டுதோறும் பன்னிரண்டு ரூபாயைப் பறிகொடுத்துத் தீரவேண்டியிருக்கிறது. நிர்வாகிகள் மூலம் ஊதியம் அளிக்கப்பட்டுவந்த பழைய ஏற்பாட்டில் ஆசிரியர்கள் தங்களுடைய ஊதியம் முழுவதையும் பெற்றுவந்தார்கள். ஆனால் மணியார்டர் மூலம் ஊதியம் பெறுகிற புதிய ஏற்பாட்டிலோ அவர்கள் ஆண்டுதோறும் பன்னிரண்டு ரூபாயை இழந்துவிடுகிறார்கள். ஆசிரியர்கள் பெற்றுவருகிற ஊதியமே மிகக் குறைவு. மிகக் குறைந்த அந்த ஊதியத்தை மணியார்டர் கழிவு என்கிற பெயரால் மேலும் குறைத்துவிடுகிற புதிய ஏற்பாட்டை ஆசிரியப் பெருமக்களுக்கு நன்மை தரும் ஏற்பாடு என்று எவர்தானுகட்டும் எவ்வாறு கூறமுடியும் ? கூறினால், அந்தக் கூற்று, எவ்வாறு உண்மையாக இருக்கமுடியும் ?

புதிய ஏற்பாட்டால் விளையக்கூடிய மற்றொரு பெருங்கேட்டை இங்கே குறிப்பிடாமல் இருக்கமுடியாது. பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே இத்தனை ஆண்டுகளாக இருந்து வந்த நல்ல உறவும் இணக்கமான நிலையும் சீர்குலைந்து சின்ன பின்னமாகிவிடும் என்பதே அந்தக் கேடு ஆகும். ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிப்பவர்கள் நிர்வாகிகள் என்று நிலைமை இருந்தால்தான், ஆசிரியர்கள் நிர்வாகிகளுக்குக் கட்டுப்படுகிற நிலையும் இருக்கும். அத்தகைய நிலையில்தான் நிர்வாகிகள், ஆசிரியர்களின் வேலையை மேற்பார்வை செய்யவும், சரியான முறையில் வேலை செய்யப்படாத காலத்தில் ஆசிரியர்களைக் கண்டித்துத் திருத்தவும் முடியும். ஆனால் ஆசிரியர்கள் அரசாங்கத்திடமிருந்து நேரடியாக ஊதியம் பெறுகிற புதிய ஏற்பாட்டின்கீழ், ஆசிரியர்களைக் கட்டுப்படுத்துகிற வாய்ப்பும் வசதியும் நிர்வாகிகளுக்கு இல்லை என்பது வெள்ளிடைமலை. இந்தநிலையில் பள்ளிக்கூடத்தின் கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் சீர்குலைந்து, அளிக்கப்படுகிற கல்வியின் தரம்குறைந்து, ஆரம்பக் கல்வியின் சீரான வளர்ச்சி தடைபடும் என்பதை யாரும் மறுக்கமுடியாது.

தனியார் பள்ளிகள் தழைத்து ஓங்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, அந்தப் பள்ளிகளுக்கான நிர்வாகிகள்

என்று பலரை ஏற்றுக்கொண்டு, அவர்களிடம் பள்ளிக்கூடப் பொறுப்பு முழுவதையும் ஒப்படைத்துவிட்டு, ஆசிரியர்களுக்கான உதியத்தை வழங்கும் உரிமையைமட்டும் அவர்களுக்கு அளிக்க மாட்டோம் என்று சொன்னால் அது எப்படி நியாய மாகும் என்பதுதான் நமக்கு விளங்கவில்லை.

நாம் இத் தலையங்கக் கட்டுரையின் தொடக்கத்திலேயே தெரிவித்திருப்பதுபோல, யாரோ இரண்டொரு நிர்வாகிகள் ஆசிரியர்களுக்கான ஊதியத்தை உரிய காலத்தில் தராமல் இருக்கலாம். அல்லது இரண்டோர் ரூபாய்களைக் குறைத்துத் தந்திருக்கலாம். அப்படிப்பட்ட தவறான செயல்களில் ஈடுப டக்கூடிய ஒரு சில நிர்வாகிகளைத் தண்டித்துத் திருத்துவதற் குத் தேவையான எல்லா அதிகாரங்களும் கல்வி இலாகா அதிகாரிகளுக்கு இருக்கின்றன. அத்தகைய நிர்வாகிகள் மீது அரசாங்கத்தா நியாயமான ஒழுங்கு நடவடிக்கைகள் எடுப பார்களானால் அவற்றைத் தவறு என்று யாரும் கூறமாட்டார் கள். அப்படிப்பட்ட நிர்வாகிகளின் பள்ளிக்கூடங்களுக்கு மட்டும். அரசாங்கத்தார், மணியார்டர் மூலம் ஆசிரியர்களுக்கு நேரடி ஊதியம் அளிக்கலாம். அதனையும் தவறானது என்று எவரும் கூறமுடியாது.

ஆனால் இரண்டோர் நிர்வாகிகள் செய்வதாகச் சொல்லப் படுகிற தவறுகளுக்காக எல்லா நிர்வாகிகளையும் தண்டிப்பது எவ்வாறு நேர்மையான. செயலாகும்?

அதுபோலவே, இரண்டோர் நிர்வாகிகளின் தவறுகளுக் காக ஆயிரமாயிரம் அரம்ப ஆசிரியர்கள் அனைவருக்கும் உரிய காலத்தில் ஊதியம் கிடைக்காதபடி செய்வது எப்படி முறை யான பணியாகும் ?

மூட்டைப் பூச்சிக்குப் பயந்து கொண்டு வீட்டைக் கொளுத துகிற செயல்போல, இரண்டோர் நிர்வாகிகளுக்குப் புத்தி புகட்டுவதற்காக எல்லா நிர்வாகிகளையும். எல்லா ஆசிரியர் களையும் சங்கடத்திற்கு ஆளாக்குவது சிறிதும் முறையாகாது.

புதிய ஏற்பாட்டால் தீமையே விளையும் என்பதை ஏப்ரல் மாதத்திலேயே ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் அழுத்தந் திருத்த மாகத் தெரிவித்தார்களே, அந்தக் கருத்துரை உண்மை உண்மை என்பதை ஜூலை மாதத்து அனுபவம் மிக நன்றாக விளக்கிக் காட்டிவிட்டது.

இனியாவது அரசாங்கத்தார், புதிய ஏற்பாடு பயனற்றது என்பதை உணர்ந்து நற்பயன் நல்கும் பழைய ஏற்பாட்டை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்.

இதுவே ஆரம்ப ஆசிரியர்களின் ஆவல். நிர்வாகிகள் கருத்தும் இதுவே.

பெண்களின் கல்வி

இன்றைய நிலைமை!

பள்ளிக்கூடத்தில் பெண்களுக்குக் கல்வி பற்றியும், வயது வந்த பெண்களுக்கு (முதியோர்) கல்வி பற்றியும் ஆலோசனை கூற 25 மெம்பர்கள் கொண்ட தேசீய கவுன்சில் அமைக்க இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர். பெண்களின் கல்வியை அபிவிருத்தி செய்வது, விஸ்தரிப்பது சம்பந்தமாக கொள்கைகள், திட்டங்கள், இலட்சிய அளவுகள், முதன்மைகள் வகுக்க இந்தக் குழு உதவிபுரியும். மேலும் பெண்களின் கல்வித் துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தை அவ்வப் பொழுது மதிப்பிடும், மதிப்பீடு வேலைக்கான யோசனைகளும் கூறும்.

1951-ஆம் வருடத்திய ஜனசங்கியைப்படி இந்தியாவில் எழுத்தறிவுடையவர்கள் 5,92,51,001 பேர்கள். இதில் ஆண்கள் 4,56,01 184 பேர்கள். பெண்கள் 1.36 49,817 பேர்கள் அதாவது இந்தியாவின் ஜனத்தொகையில் எழுத்தறிவுடையவர்கள் 16·61 சதவிகிதமாகும். எழுத்தறிவுடைய ஆண்கள் 24·87 சதவிகிதம்; பெண்கள் 7·87 சதவிகிதமாகும்,

1951-க்குப் பிறகு இதுவரையிலுமான காலத்தின்போது எழுத்தறிவு பெற்றவர்களின் தொகை சிறிது உயர்ந்திருக்கும். எனவே ஜனத்தொகையில் சுமார் 80 சதவிகிதம் பேர்கள் இன்னும் எழுத்தறிவில்லாமல் இருக்கின்றனர், இந்நிலை இந்தியா ஜனநாயகத்தில் சிலாகிக்கத்தக்க அளவுக்கு முன்னேற்றம் எய்துவது இன்னும் பல வருடங்களுக்கு சாத்தியம் இல்லாமல் இருக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுகிறது. எழுத்தறிவுள்ள ஆண்கள் 24 87 சதவிகிதமாக இருக்கும் பொழுது அந்த அளவுக்கு எழுத்தறிவுடைய பெண்கள் தொகையும் இருந்திருந்தால அது ஓரளவுக்கு மனதிற்கு ஆறுதலாக இருக்கும். ஆனால் எழுத்தறிவுடைய பெண்களின் தொகை

7·87 சதவிகிதமாக இருப்பதைக் காணும் பொழுது மிக வேதனையாக இருக்கிறது. 1951க்குப் பிறகு இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக இது இன்னும் சில சதவிகிதம் அதிகரித்திருக்கலாம் எனினும் எழுத்தறிவுடைய ஆண்களின் சதவிகிதத்தோடு ஒப்பிடும்பொழுது மிக மிகக்குறைவு.

ஜனநாயகத்தில் ஆண் வாக்காளர்களுக்கு எவ்வளவு பொறுப்பு உண்டோ அவ்வளவு பெண் வாக்காளர்களுக்கும் உண்டு. எனவே எழுத்தறிவுடைய ஆண்கள் பெண்களின் சதவிகிதம் ஏறக்குறைய சரிசமமாக இருக்க வேண்டியது அவசியம். தற்போதுள்ள நிலைமையில் ஆண்களுக்குக் கல்வி புகட்டுவதில் செலுத்தப்படும் கவனத்தைவிட பெண்களுக்குக் கல்வி போதிப்பதில் அதிகபடியாகக் கவனம் செலுத்த வேண்டியது அத்தியாவசியமாக இருக்கிறது. எழுத்தறிவில்லாப் பெண்கள் இவ்வளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

"பெண்களிடையே எழுத்தறிவின்மையைப் பொருத்த வரையில், அதற்கான காரணம் ஆண்கள் சோம்பேறிகளாக இருப்பதைப்போல் பெண்களும் சோம்பேறிகளாக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, தலைமுறை தலைமுறையாக அவர்களை அநியாயமாகத் தாழ்ந்த நிலையில் வைத்திருப்பது ஒரு காரணமெனத் தோன்றுகிறது. பெண்ணைத் தனது வாழ்க்கைத் துணைவியாகக் கருதாமல், வீட்டு வேலைக்காரியைப் போலவும், இன்பக் கருவியாகவும் ஆண் அடிமைப் படுத்தி விட்டான். இதன் விளைவு நமது சமுதாயம் ஓரளவு சீர்குலைந்து விட்டது. நாம் அவர்களுக்குச் செய்துள்ள இந்தப் பெரும் தீமையை நீக்குவது நம் கடமையாகும்" என்று காந்தியடிகள் காரணம் குறிப்பிட்டிருக்கிறார்.

மாறிவரும் காலப் போக்கில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக முன்னேறி வருகிறார்கள். ஆனால் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ள நாடுகளில் இந்த நிலை பூரணமாக ஏற்படவில்லை. நமது நாடு அபிவிருத்தியில் பின்தங்கி இருந்த போதிலும், பிரிட்டிஷ் ஆட்சியின்போது நடந்த சுதந்திரப் போராட்டத்திலும், சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள விழிப்பின் காரணமாகவும் பெண்களை அடிமைகளாகப் பாவிக்கும் நிலை படிப்படியாகக் குறைந்து வருவதைக் காண்கிறோம். பெண்கள் உத்தியோகங்கள் வகிக்க முன்வந்துள்ளனர். இந்த முற்போக்கான பெண்களின் தொகை எழுத்தறிவுடைய பெண்களில் மிகச் சொற்பமே யாகும். இது ஒருபுறம் இருக்கட்டும்.

அனைவருக்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி அளிக்கும் இலட்சியம் பூர்த்தியாகும்பொழுது, பெண்களில் எழுத்தறிவில்லாதவர்களின் தொகை கணிசமாகக் குறைந்துவிடும். எழுத்தறிவில்லாமல் ஏற்கனவே இருக்கும் முதியவர்களின் கல்விக்கு என்ன செய்வது? இந்தப் பிரச்சனை கவனிக்கப்பட வேண்டியதாகும்.

முதியோர்களுக்குக் கல்வி அளிக்க அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த நடவடிக்கைகளை இன்னும் தீவிரப்படுத்தவேண்டியது அவசியம்.

மேனாடுகளில் பள்ளித் தொடர்ச்சி வகுப்புகள், இரவுப் பள்ளிகள், சர்வகலாசாலை விஸ்தரிப்பு வகுப்புகள் அல்லது முதியோர் நிலையங்கள் என்னும் பெயரில் இலக்கியம், விஞ்ஞானம் போன்ற பொது விஷயங்களிலும், குறிப்பிட்ட வர்த்தகம், தொழில்கள் சம்பந்தமாகவும் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள ஒருபோதும் படித்திராத அல்லது ஆரம்பக்கல்விக்குப் பிறகு படித்திராத ஆண்களுக்கும், பெண்களுக்கும் இலவசமாகக் கல்வி அளிக்கப்படுகிறது. இந்த முறையை நமது நாட்டிலும் அனுஷ்டித்தால் முதியோர் கல்விப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பது சாத்தியமாகும்.

வயதுவந்த பெண்களுக்கு (முதியோர்கள்) சுகாதாரம், துப்புரவு, உடலியல், நமது நாடு சம்மந்தப்பட்ட ராஜ்ய பரிபாலனம், பொருளாதாரம், பூகோளம், வீட்டு விஞ்ஞானம் முதலியவைகளையும் போதிப்பது அவசியமெனக் கருதப்படுகிறது. அப்பொழுதுதான் அவர்கள் பிரஜைகள் என்ற முறையில் நாட்டுக்குத் தங்களுடைய கடமைகளைச் செவ்வனேசெய்ய முடியும். இந்த விஷயங்களில் தேசீய கவுன்சில் கவனம் செலுத்துமென்று எதிர்பார்க்கிறோம்.

"நவ இந்தியா"

14–7–59 *இதழ் தலையங்கம்*

தமிழுக்காக அரும்பாடுபட்ட பெருமகனுர் வேதநாயகம்

அன்னுரின் 70-ம் ஆண்டு நினைவு விழாவில் அறிஞர்கள் புகழுரை

மாயூரம் நீதிபதி அறிஞர் திருச்சி வேதநாயகம் பிள்ளையின் 70-ம் ஆண்டு நினைவு நாளும், அன்னுர் இயற்றிய 'நீதி-நூலின்' நூற்றுண்டு விழாவும் அன்மையில் மைலாப்பூரில் சென்னை எழுத்தாளர் வட்டம், சென்னை நகர மக்கள் பாராட்டுக் குழு, வேதநாயகம் பிள்ளை நினைவுக் குழு ஆதரவில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவை லயோலா கல்லூரி முதல்வர் திரு. லாரன்ஸ் சுந்தரம் துவக்கி வைத்தார்.

டாக்டர் ஏ. கிருஷ்ணஸ்வாமி எம். பி. விழாவிற்குத் தலைமை வகித்தார்.

வேதநாயகர் ஞாபகார்த்தக் குழு சார்பாகத் தலைவர் திரு. டி. புருஷோத்தம முதலியார் எம். எல். சி. யாவரையும் வரவேற்ருர்.

சென்னை எழுத்தாளர் வட்டம் சார்பாகச் செயலாளர் திரு. எல். எஸ். மணி யாவருக்கும் நல்வரவு கூறினுர்.

திரு. கே. எஸ். இராமஸ்வாமி சாஸ்திரியார் வேதநாயகர் ஞாபகார்த்தத் திட்டங்களைத் துவக்கி வைத்தார். 'மாயூரத்தில் வேதநாயகருக்கு உருவச்சிலை ஏற்படுத்தி, மாயூரத்தில் பள்ளி மாணவர்கட்கு உபகாரச் சம்பளங்கள் கொடுத்து, திருச்சிக் கடுத்த குளத்தூரில் ஒரு மணிமண்டபம் அன்னுர் பெயரில் எழுப்பி, ஒரு புத்தகசாலை ஒரு வாசகசாலை நிறுவி, அன்னுர் இயற்றிய 16 நூல்களை மலிவுப் பதிப்பாக வெளியிடுதல், அன்னுர் நினைவாக ஒரு நினைவு மலர் வெளியிடுதல் என்பது திட்டம்' என்று திரு. சாஸ்திரியார் தெரிவித்தார். இவைகளை நடைமுறையில கொண்டுவர வேதநாயகர் நினைவு டிரஸ்டு ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது என்றும் கூறினுர்.

பேராசிரியர் எம். இரத்னஸ்வாமி வேதநாயகர் உருவப் படத்தைத் திறந்துவைத்து மாலை சூட்டினுர்.

வேதநாயகர் நூல் கண்காட்சியைத் திரு. டி.புருஷோத்தம முதலியார் திறந்து வைத்தார். 'நீதி நூல்' 'சர்வ சமய சமரசக்

கீர்த்தனை' என்ற வேதநாயகர் நூல்களை ஒரு புலவர் பரிசீலனை செய்து மலிவுப்பதிப்பாக வெளியிட வேதநாயகர் நினைவுக் குழு முடிவு செய்திருப்பதாகக் கூறினார்.

'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. ஜகநாதன் வேதநாயகரின் புலமையை விளக்கினார்.

பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி பேசுகையில், வேதநாயகர் ஒரு சிறந்த ரசிகர். அவர் பாடாத பொருளே இல்லை. தமிழுக்கு முதன்மை தந்து, சமயச் சார்பு சிறிதுமில்லாது பொதுக் கருத்துக்களைப் புது வகையில் புகுத்தி, இலக்கண வரம்பு பிறழாது தமிழ்ப் பாடல்கள் பலவற்றைச் சுவைபடப் பாடி தமிழிசையின் மறுமலர்ச்சிக்குப் புத்துயிர் அளித்த பேரறிஞரும் அவரேயாவர். அவருடைய வர்ண மெட்டுகளைத் தேடிப் பிரசுரம் செய்தால் இசையுலகிற்கு அதனால் மிகுந்த பயன் உண்டாகும் என்று கூறினார்.

திரு. எஸ். சச்சிதானந்தம் பிள்ளை தமிழுக்காகப் பெரிதும் பாடுபட்ட ஒரு பெருமகனார் வேதநாயகம் பிள்ளை. வாழ்வுக்கொரு வழிகாட்டியாக விளங்கியவர். அவர் உரை நடையின் தந்தை. புலவர்களின் மரபையே ஆக்கிய புலவர் வேதநாயகராவர்' என்று கூறினார்.

டாக்டர் ஏ. கிருஷ்ணஸ்வாமி தமது சொற்பொழிவில், வேதநாயகனார் நேர்மையான நீதி பரிபாலனம் செய்தார். தமிழ் இசைக்கு ஏற்றம் வழங்கினார். வசன முறைக்கு வழிகாட்டினார். பெண் இனத்தைக் கண் இனமாக மதித்துப் பெருமை கொடுத்தார். தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி தலையெடுக்கவேண்டும் அது தழைத்தோங்க வேண்டும். அது சார்ந்த நீதி மன்றங்களில் தமிழ் மொழியிலேயே சட்டதிட்டங்களும் அமைய வேண்டும் என்று தைரியமாக வாதாடினார் வேதநாயகம் என்று கூறினார்.

நீதி நூல் நூற்றாண்டு விழா

1857-ல் வேத்நாயகர் வெளியிட்ட 'நீதிநூல்' நூற்றாண்டு விழாவும் வைபவத்தில் கொண்டாடப்பட்டது. நூலைப்பற்றி திரு. எல. எஸ். மணி பேசுகையில், 'நீதி நூல் எளிய தமிழ் நடை கொண்டுள்ளது. மதச் சார்பற்றது. அறவழிகள் நிறைந்தது. அனைவருக்கும் பொதுவான வரையறுத்த நீதிகள் உணர்த்தப் பெறுகின்றன. இனிய' எளிய உவமைகள் இடம் பெற்றுள்ளன. ஆங்காங்கு நகைச்சுவைகளும் காணக்

கூடியன. விருப்பு, வெறுப்பின்றி வழிகள் வேராறுக்கப்பட்டிருக்கின்றன. மக்களை மக்களாக வாழ வழி வகுக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியினழகை எடுத்துக் காட்டுகின்றது. 400 பாடல்கள் முதலில் இருந்தது. பின்னர் திரு. ரீனுட்சிசுந்தரம் பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க அதில் 200 பாடல்களைச் சேர்த்து 600 பாடல்களாக வெளியிட்டார். நீதி நூல் திருக்குறளுக்கு உரை போன்று அமைந்துள்ளது' என்று குறிப்பிட்டார்.

—'. சுமி'

ஆரம்ப ஆசிரியர்கள் நிலைமை

மத்திய கல்வி மந்திரி வருத்தம்

—புதுடில்லி, ஜூன், 30

மத்திய கல்வி அமைச்சர் டாக்டர் கே. எல். ஸ்ரீமாலி ஆரம்ப ஆசிரியர்களின் நிலையை உயர்த்துவதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்றும் அல்லாத வரையில் கல்விச் சீரமைப்புப்பற்றி நாம் பேசுவன யாவும் பொருளற்றவையே எனவும் இங்கு நடைபெற்ற கல்வித்துறை செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

சில ராஜ்யங்களில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு சம்பளம் குறைந்த பட்ச விதத்தில் கூட கொடுக்கப்படவில்லை. இது வருந்தத் தக்கது. இவர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை மாதம் 40 முதல் 50 ரூபாய்வரையாவது கொடுக்க வேண்டும் எனவும் அவர் கூறினர்.

கட்டாயக் கல்விபற்றிக் குறிப்பிடுகையில் 6—ல் இருந்து 11வயது குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வியைப் புகுத்துவதைப் பூர்த்தியான திட்டம் என்று கருதிவிடக் கூடாது என்றும் உறுதியான எதிர்கால ஜனநாயகத்தை உருவாக்குவதற்கு இது குறைந்த பட்சம் அவசியமானது என்றும் அவர் கூறினர்.

கட்டணம் வசூலிக்கும் ஆரம்பப் பள்ளிகளில் என். ஜி. ஓ. வினர் குழந்தைகளுக்குக் கல்விச்சலுகை

அரசாங்கத்தின் புதிய உத்தரவு

சென்னை, ஜூலை 7.

முதல் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்பு வரை தொடர்ந்து கட்டணம் விதிக்க முடிவு செய்துள்ள ஆரம்ப, உயர்தர ஆரம்பப் பள்ளிகள் மேற்குறிப்பிட்ட வகுப்புகள் விஷயமாக சென்னை கல்வி விதிகளின் கீழும், அல்லது இதர விசேஷ உத்திரவுகளின் படியும் கல்விச் சலுகை பெற்றுள்ள என். ஜி. ஓ. வினர், ஆசிரியர்கள், ஸ்தலஸ்தாபன ஊழியர்கள், அரசியல் தியாகிகள் ஆகியவர்களுடைய குழந்தைகளுக்கு கல்விச்சலுகையை 1959-60 பள்ளி ஆண்டிலிருந்து நீடிக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

மாநிலத்தில் போதுமான அளவு இலவசப் பள்ளிகள் இருப்பதையும், கட்டணம் விதிக்கும் பள்ளிகள் ஒவ்வொன்றின் விஷயத்திலும் ஒரு மைல் சுற்றளவுக்குள் இலவசப் பள்ளிகள் இருப்பதையும் அனுசரித்தே அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்துள்ளது. இலவசப்பள்ளிகள் போதிய அளவில் இருப்பதனால், தற்போது கல்விச் சலுகைகள் பெற்றுவரும் குழந்தைகளை அந்தந்தப் பெற்றோர்கள் விரும்பினால் கட்டணம் விதிக்கும் பள்ளிகளிலிருந்து நிறுத்தி விட்டு, இலவசப் பள்ளிகளில் சேர்ப்பதற்குச் சங்கடம் எதுவும் இராது.

கல்விச் சலுகை பெற்றுள்ள குழந்தை எதற்கும், இலவசப் பள்ளிகளில் இடம் மறுக்கப்படலாகாது என்றும் இதற்கான வசதிகள் செய்யும்படியும் கல்வித் துறை நெறியாளருக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் கிராண்ட் மதிப்பிடுதல்

சென்னை அரசினர் உத்தரவு

சென்னை, ஜூலை 10

ஆசிரியர்கள், மாணவர்கள் விகிதம் 1 : 35 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும் என்ற ஏற்பாடு 1958—59-ல் அமுலாக்கப் பட்டதையொட்டி, ஆரம்பப் பள்ளிகளுக்கு கிராண்ட் தொகையை 1958—59-க்கு மதிப்பிடுவதில், பதிலுக்கு நியமன ஆசிரியர்கள், இணைக்கப்பட்ட வகுப்புகளின் ஆசிரியர்கள், பயிற்சி பெறாத ஆசிரியர்

கள், பயிற்சி பெற்று ஆனால் தேர்வு பெறாத ஆசிரியர்கள் ஆகியவர் களின் சம்பளம் எந்த விதத்தில் கணக்கெடுக்கப்படலாம் என்று வரையறுத்து அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

1958 ஜூலை மாதத்திலிருந்து உயர்தர ஆரம்பப் பள்ளிகள் உள்பட தனியார் நிர்வாகத்திலுள்ள ஆரம்பப் பள்ளிகளின் ஆசிரியர் மாணவர் விகிதம் 1 : 35 என்றும் அந்தப்படி கணக்கிட்டே கிராண்ட் மதிப்பிடப்படும் என்றும் 1958 ஏப்ரலிலேயே அர சாங்கம் அறிவித்திருந்தது. ஓய்வு பெற்றுச் செல்லுதல், ராஜினாமாக் கள் ஆகியவைகளை யொட்டி 1958-ல் நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் 1 : 35 என்ற விகிதத்தை அனுசரித்து இவ்வாறு போனாலும் கிராண்டுக்காக அனுமதிக்கப்படுவார்கள் : ஆனால் பதில் நியமனத் துக்குப் பின்பு ஆசிரியர்கள் எண்ணிக்கையும், சராசரி ஆஜரும் 1958 ஏப்ரல் அல்லது மேயில் இருந்த அளவு இருக்க வேண்டும். 1 : 35 என்ற விகிதத்தை கவனிக்காமல் 1958 ஜூனில் அல்லது அதற்குப் பின்பு செய்யப்பட்ட நியமனங்கள், கிராண்டுக்காக மதிப்பிடப் படாது. புதிய விகிதத்தை அனுசரித்த காரணமாக இணைசகப்பட்ட வகுப்புகள் அவசியமாகி 58--59ல் கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட் டிருந்தால். அத்தகைய ஆசிரியர்கள் சார்பில்1858—59-க்கு மட்டுமே கிராண்ட் மதிப்பிடப்படும். பயிற்சி பெறாத ஆசிரியர்கள், விதிவிலக் குப் பெற்றுக் கொண்டு சர்விசில் நீடித்திருப்பார்களானால் திருத்தப் பட்ட விகிதம் பூர்த்தியாகியிருந்தால் மட்டுமே அந்த ஆசிரியர்கள் கிராண்ட் மதிப்பீட்டிற்குச் சேர்க்கப்படுவார்கள். பயிற்சி பெற்ற பின்பு சர்வீசில் நீடித்திருப்பார்களானால் 1958—59-ல் விகிதக் கணக்கை அனுசரிக்கவேண்டியதில்லை.

பழைய விதிப்படிக்கு கிராண்ட்டை மதிப்பிட அனுமதியளிக் கப்பட்டுள்ள இடங்கள் விஷயமாக 1958 ஏப்ரல் அல்லது மே மாதத் தில் உள்ள ஆசிரியர்கள் தொகையை அடிப்படை அளவாகக் கொள் ளலாம் என்றும் சராசரி ஆஜர் அளவு 1958 ஏப்ரல் அல்லது மேயில் இருந்தபடியே நீடித்திருக்குமானால் பழைய 1:20 விகிதத்திலேயே கிராண்டை மதிப்பிடலாம் என்றும் அரசாங்கம் உத்தரவிட்டிருக் கிறது.

ஹெட்மாஸ்டர்களாக ஆக்டிங்கில் இருக்கும் ஆசிரியர்கள், ஆசிரியர்—மானேஜராக இருப்பவர்கள் ஆகியோர் விஷயத்தில் விதி கள் தளர்த்தவும்பட்டுள்ளன. ஆனால் இந்த விதி தளர்த்தல் எல்லாம் 1958—59-க்கு மட்டுமே ஆனது. 1959—60-க்கான கிராண்ட் மதிப்பீட்டில் அரசாங்கத்தின் விதிமுறைகள் கண்டிப்பாக அனுசரிக் கப்படும்.

நவ இந்தியா

உலகத்திலேயே மிகப் பெரிய நூல் நிலையம்

கே. எம். செரியன்

வாஷிங்டனிலுள்ள அமெரிக்கக் காங்கிரஸ் நூல் நிலையந்தான் அந்நகரில் என் மனத்தை அதிகமாகக் கவர்ந்தது. உலக முழுவதிலும் பிரிட்டிஷ் மியூஸியம் நூல் நிலையமே மிகக் கூடுதலான புத்தகங்கள் கொண்டது என்று அதுவரை நான் எண்ணி இருந்தேன். இப்பொழுது அந்த அமெரிக்க நூலகத்தைப் பார்த்த பிறகுதான் அது எவ்வளவு பெரிது என்பதை உணர்ந்தேன். அமெரிக்கர் உலகத்திலேயே இதுதான் மிகப் பெரிய நூல் நிலையம் என்பர். அது உண்மை என்பதை அதனைப் போய்ப் பார்ப்பவர் எவரும் ஒப்புக்கொள்வர்.

பதின்மூன்று ஏக்கருக்கும் அதிகமான நிலப் பரப்பு. அதில் பல மாடிகள் உள்ள பல கட்டடங்கள். அவற்றில் அடுக்கடுக்காக ஆயிரமாயிரம் புத்தகங்கள். காண்பவர் யார்தான் வியப்படையார்? புத்தகங்களைத் தொகுத்து வைத்திருக்கிறார்கள் என்று சொல்வதை விட அது ஒரு புத்தகக்கடல் என்பது பொருந்தும். என்னுடன் வந்த நண்பர் திரு. வி. கே. நரசிம்மன் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு புத்தகம் வெளியிட்டிருந்தார். அந்தப் புத்தகத்தைக் காட்ட முடியுமா என்று அங்கே எங்களை அழைத்துச் சென்று காட்டியவரிடம் கேட்டோம். அவர் அப்புத்தகம் வழக்கமாக இருக்குமிடத்துக்கு எங்களைக் கூட்டிக் கொண்டு போனார்; அங்கே அட்டவணை அட்டைகளைப் பார்த்தார். பின்னர் நாங்கள் சொன்ன புத்தகத்தை எடுத்து எங்களிடம் நீட்டினார்.

அங்கு நாங்கள் இரண்டு மணி நேரம்தான் சுற்றிப் பார்க்க இருந்தது; அதனால் எல்லாவற்றையும் அவசரம் அவசரமாகவே பார்க்க முடிந்தது.

இரண்டு பெரிய கட்டடங்களில் புத்தகங்களை வைத்திருக்கிறார்கள். இந்த இரண்டு கட்டடங்கள் நிற்கும் இடத்தின் பரப்பளவு மட்டும் 13 ஏக்கர். அவற்றின் அடுக்குகள் எல்லாவற்றையும் கணக்கெடுத்தால் தரை மட்டப் பரப்பளவு 36 ஏக்கர் ஆகும். புத்தக அலமாரிகளின் மொத்த நீளம் 4 மைல். அங்கே உள்ள படிப்பகங்கள் 21. ஆராய்ச்சி செய்ய விரும்புவோருக்குத் தனி வசதிகள் செய்து கொடுத்திருக்கிறார்கள். நூலகத்தின் முதன்மையான கட்டடம் 1892ல் கட்டப்பட்டது. அழகிய இத்தாலிய பாணியில் அமைந்த அக் கட்டடத்தை

ஒட்டி 1939ல் வேறு புதிய கட்டடங்களும் எழுந்தன.

ஒரு கட்டடத்திலிருந்து இன்னொரு கட்டடத்துக்குப் புத்தகங்களை அனுப்பச் சுரங்க வழிகள் அமைத்திருக்கிறார்கள். வேண்டும் புத்தகங்களை வேண்டும் இடத்தில் சில வினாடி நேரத்தில் கொண்டு சேர்ப்பதற்கு மின்விசைச் சூழ்ச்சியங்கள் வைத்திருக்கிறார்கள்.

இந்தக் காங்கிரஸ் நூலக ஆராய்ச்சி செய்வோருக்கு அளவிலா வசதிகள் உடையது. அங்கேயில்லை மதிக்கவொண்ணாத 3,60,00,000 வெளியீடுகள் இருக்கின்றன. இவற்றில் 1,10,00,000 நூல்களும் ஆகும். இவையும் எல்லா விஷயங்களையும் பற்றியவை. 1,59 000 பத்திரிகைத் தொகுப்புகள் அட்டைக் கட்டி வைக்கப்பட்டுள்ளன. மற்றும் உலக மெங்கும் உள்ள பத்திரிகைகள் முதலியவையும் ஒவ்வொரு பிரதி உள்ளன. அமெரிக்க வரலாறு, கலாசாரம் இவை பற்றிய 1,5[illegible],00,000 கையெழுத்துப் பிரதிகளும் இருக்கின்றன. இன்னும் புகைப்பட "நெகடிவ்கள்", புகைப்படங்கள், ஸ்லைடுகள், 29.00,0 0 கிராமபோன் தட்டுகள் 1,01,000 திரைப்படச் சுருள்கள் 11,800 மைக்ரோ-பிலிம் சுருள்கள் 1 34,000 ஆகியவையும் உள்ளன,

அமெரிக்க வரலாற்றுக் குறிப்பமைந்த கையெழுத்துப் பிரதிகளின் தொகுப்பு நிறைய விஷயங்களைத் தெரிவிக்கக்கூடியது. இதில ஜார்ஜ் வாஷிங்டன் முதலாகப் பல ஜனாதிபதிகளின் கையெழுத்துப் பிரதிகளும், மற்றும் அமெரிக்க விஞ்ஞானிகள், அரசியலறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

இத்தகைய காங்கிரஸ் நூலகத்தின் அதிகாரியை செனட் சபையின் ஆலோசனை அங்கீகாரங்களின் பேரில் ஜனாதிபதி நியமிக்கிறார். அந்த அதிகாரிக்குக் கீழ் வேலை பார்ப்பவர்கள் பல்வேறு மொழிகளுக்கும் பிரதேசங்களுக்கும், பொருள்களுக்கும் ஆகச் சுமார் 2,000 பேராவர். 1947ல் இந்த நூலகத்துக்கு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கிய தொகை 1,6[illegible],64.262 டாலர். இதுபோக இன்னும் வேறு அரசாங்க ஸ்தாபனங்களும் 3,77,17,000 டாலர் ஒதுக்கிக் கொடுத்தன. இவையும் தவிர இன்னும் வேறு 17,62,128 டாலர் நன்கொடை முதலியவைகளால் கிடைத்தது.

இந்தக் காங்கிரஸ் நூலகத்தில் எங்கள் மனத்தை மிகவும் கவர்ந்தது கீழை நாட்டுத் துறையாகும். அதுவும் அதிலுள்ள இந்தியப் பகுதியே அதிகம் கவர்ந்ததாகும். அப்பகுதியில் இந்தியாவில் வெளியான புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் கூடக் கண்டோம். இந்தியாவுல் மிகச் சிறுபான்மையோர் பேசும் மொழியான மலையாளத்தில் எழுதிய புத்தகங்கள் பலவும் அங்கே இருந்தன.

அழகு முகம்

(இராதா மணாளன்.)

"வாங்கம்மா!" என்று கடை முதலாளியே எழுந்து வந்து அவளை வரவேற்றான்.

"ஏதாவது புதிதாக......"

"பொங்கலாயிற்றே, உங்களைப் போன்றவர்களுக்கு நல்லதா, பிடித்தமானதா தரணுமேன்னு, காஞ்சிபுரத்திற்கும் ஆரணிக்கும் போயிட்டுக் காலையில்தான் வந்தேன்! கொள்ளேகாலம் பட்டுப் புடவைகளும், ஸ்பெஷல் கிரேப் சில்க் ரகங்களும் வந்திருக்கின்றன! உட்காருங்களம்மா!" என்று ஜவுளிக்கடை முதலாளி நெளிந்து குழைந்து பேசி, நாற்காலியை இழுத்துப்போட்டான்.

அதற்குள் கடைப் பையன் ஓடிப்போய், குளிர்பானம் வாங்கிக்கொண்டுவந்தான்!

சிவகாமி கடைக்குள் அடியெடுத்து வைத்துவிட்டாள் என்றால், அன்று குறைந்தது ஐந்நூறு ரூபாய்க்காவது வாங்காமல் போக மாட்டாள் என்பது முதலாளிக்கு உறுதியாகத் தெரியும்—ஆகவே உபசாரங்கள் பலமாக இருக்கக் கேட்கவா வேண்டும்?

சிவகாமியின் கழுத்திலிருந்த வைர நெக்லேசும், காதிலிருந்த வைரத் தோடும், லோலாக்கும் மின்சார விளக்குகளின் ஒளியில் அவளது செல்வ நிலையை ஆடம்பரச் சிரிப்போடு பறைசாற்றிக் கொண்டிருந்தன. ஒய்யாரமாக அவள் நாற்காலியில் அமர்ந்து ஒரு கையிலிருந்த கற்கள் பதிக்கப்பட்ட தங்க வளையல்களை மேலே தள்ளிவிட்டு, மற்றொரு கையிலிருந்த கடிகாரத்தைப்பார்த்தாள்.

"மூன்றாகிவிட்டதா?" என்று முணுமுணுத்தபடி, கடைக்காரன் பிரித்துப்போட்ட புடவைகளைப் பார்த்தாள்.

நான்கைந்து புடவைகள் இன்று செலவழியும் என்று எதிர் பார்த்தான் கடைக்காரன். அதைப்போல இருமடங்கு அவள் தேர்ந்தெடுத்து விடவே, அவன் முகமெல்லாம் பல்லாகி விட்டது!

கடையைவிட்டு இறங்கியவளை, "அம்மா! பசியாயிருக்கு! ஓரணாக் கொடுங்கம்மா!" என்ற பிச்சைக் காரியின் குரல் தடுத்து நிறுத்தியது.

சிவகாமியின் கண்கள் அவளை உற்றுப் பார்த்தன. வயது பதினேழு பதினெட்டுத்தான் இருக்கும். கட்டான உடல், கவலை மேகங்களுக்குப் பின்னால் மதி முகம், கிழிந்த புடவை, வாராத தலை......பரிதாபமான தோற்றம்!

"ஓரணாவுக்கு என்னம்மா சாப்பிடுவாய்?" புன்னகையோடு சிவகாமி கேட்டாள்.

"உங்களைப்போல நாலு பேரு ஒவ்வொரு அணா கொடுத்தா..."

பிச்சைக்காரி கூறியது அதற்கு மேல் கேட்கவில்லை—அவள் சிந்தனை எங்கோ ஓட ஆரம்பித்து விட்டது.

"என் வாழ்க்கையில் எதையாவது புதுமையாகச் செய்யவேண்டுமென்று நினைக்கிறேன்! ஆனால் எதைச் செய்வது என்றுதான் புரியவில்லை!" என்று தன் கணவன் அடிக்கடி சொல்வது, இப்பொழுது அவள் கவனத்திற்கு வந்தது.

"அவருக்கு முன் அதை நான் செய்து காட்டுகிறேன்!" என்ற இதய முணுமுணுப்போடு, பிச்சைக்காரியைப் பார்த்தாள்.

"நீ என்னோடு வருகிறாயா, சோறும் போடுகிறேன், காசும் தருகிறேன்!" என்றாள்.

"எங்கேயம்மா?"

"என் வீட்டிற்கு!"

"வேண்டாம்மா, ஓரணாக் கொடுங்கம்மா போதும்!"

"என்னோடு நீ வந்தால் நான் மகிழ்ச்சியடைவேன் — வரமாட்டாயா?" என்று பரிவோடு பேசியவளை உதட்டிலே விரலை வைத்தபடி ஆச்சரியத்தோடு பார்த்தாள், பிச்சைக்காரி.

"வா!" என்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு, காரைநோக்கி நடந்தாள் சிவகாமி.

ஓடிய காரில் உட்கார்ந்திருந்த பிச்சைக்காரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

"ஒருவேளை..." எதையோ நினைத்துக்கொண்டு "அம்மா! அம்மா!" என்று கத்தினாள்.

"என்ன?"

"என்னைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் விட்டுவிடப் போகிறீங்களா அம்மா?" பிச்சைக்காரி அழவே ஆரம்பித்து விட்டாள்.

"என்னைப் பார்த்தால் அந்த கைய கொடூர நெஞ்சம் கொண்டவளாகவா உனக்குத் தெரிகிறது? பயப்படாதே! உன் பெயர் என்னம்மா?"

"சாமந்தி!"

"சொந்தக்காரர்கள் உனக்கு யாவருமே இல்லையா?"

"அப்பா மட்டும் இருக்கிறாரு! ஏதாவது கூலி வேலை செய்து நாலணா எட்டணா கொண்டு வருவாரு! குடிசையைவிட்டு என்னை வெளியே போகவிடமாட்டாரு! அப்பாவுக்கு ரெண்டு நாளா காய்ச்சல்-அதனாலே..."

தேம்பிக் கொண்டே அவள் கூறியதைக் கேட்டதும், சிவகாமியின் மெல்லிய உடல் சிலு சிலுத்தது—இளகிய மனம் கவலையில் விழுந்து அழுந்தியது.

"வருந்தாதே சாமந்தி! இன்று முதல் உன் வாழ்க்கையே மாறி விட்டதென்று நினைத்துக்கொள்! நீ புது வாழ்வு பெறப்போகிறாய்!"

ஒன்றும் புரியாமல் பிச்சைக்காரி ஏறிட்டுப் பார்த்தபோது, கார் பெரிய பங்களாவினுள் நுழைந்தது.

காரை விட்டு இறங்கியதும் பங்களாவிற்குள் நுழையத் தயங்கிய சாமந்தியைப் பார்த்து, சிவகாமி சிரித்தாள்.

"உள்ளே வா, சாமந்தி!"

"வேண்டாம்மா, இப்படியே இருக்கிறேன்!"

"பணக்காரர்களுக்கும் இதயமுண்டு — எல்லாப் பெண்களும் சகோதரிகள் என்ற எண்ணமுண்டு—சுயநலத்தைவிடப் பிறர் நலத்தில் நாட்டமுண்டு – என்பதை உலகத்திற்குக் காட்டப் போகிறேன் நான்! உன்னைப் போல நானும் பெண்தானே — பயப்படாதே வா, சாமந்தி!" என்று கலக்கத்தோடு நின்றவளின் கையைப் பிடித்து, பங்களாவுக்குள் அழைத்துச் சென்றாள்.

மாடி அறையினுள் நுழைந்ததும், "உட்கார் இப்படி!" என்று நாற்காலியைக் காட்டினாள்.

"அதுபோலெல்லாம் உட்கார்ந்து பழக்கமில்லே அம்மா! என்று நாணத்தோடு தயங்கித் தயங்கிக் கூறியவளைப் பார்த்து, சிவகாமி கலகலவென்று சிரித்தாள்.

சாமந்தி தன்விழிகளை உயர்த்தி அந்த விசாலமான அறையில் நோட்டம்விட்டாள். வெளிர் பச்சை நிறச் சுவர்கள். சுவர்களில் மாட்டப்பட்டிருந்த தங்க நிறச் சட்டம் போட்ட வண்ண ஓவியங்கள், ஜன்னல்களில் அசைந்தாடிக்கொண்டிருந்த பட்டுத்திரைகள், மேலே சுற்றும் விசிறி, வெல்வெட் விரிப்புக் கொண்ட தாழ்வான கட்டில், மேஜைமீது விதவிதமான பொருள்கள், ஆள் உயரத்திற்கு முகம் பார்க்கும் கண்ணாடியோடு கூடிய பெரிய பீரோ ..அவளுக்கு மயிர்க் கூச்சல் எடுத்தது!

ஏதோ ஓர் அச்சம் அவள் உள்ளத்தில் விழுந்து கவ்வியது.

"எனக்குப் பயமாக இருக்கிறது! நான்போய் விடுகிறேன் அம்மா! வெளியேபோய் விடுகிறேன்!" என்று கை கால்கள் நடுங்க அவள் கூறினாள்.

"ஏன் இப்படிப் பயப்படுகிறாய், சாமந்தி?"

"என்னமோ எனக்குப் பயமாக இருக்கிறது! என்னை விட்டு விடுங்களம்மா, நான் போய்விடுகிறேன்!" அவள் அழவே ஆரம்பித்துவிட்டாள்.

அவள் தோள்மீது கையைவைத்து அழைத்து வந்து கட்டிலில் உட்காரவைத்து, தானும் பக்கத்தில் அமர்ந்தாள், சிவகாமி.

"சாமந்தி! ஏன் இப்படி நடுங்கு கிறாய்? வறுமையிலே பிறந்தோம் வறுமையிலே வளர்ந்தோம், வறுமையிலேயே புரண்டுகொண்டிருந்தோம் - அந்த வறுமை நம்மை விட்டுவிட்டு ஓடிவிடப் போகிறதே என்று அலறுகிறாயா? பைத்தியக்காரி! பயப்படாதே! என்னை நீ இன்று கண்டது, உனக்கு எவ்வளவு பெரிய அதிருஷ்டம் தெரியுமா?"

"உங்கள் பேச்சே எனக்குப் புரியவில்லையே, அம்மா?" என்று கேட்பதைப் போலச் சாமந்தி விழித்தாள்.

"மாலை ஒன்றை ஏந்தி யானை வரும்—தெருப் புழுதியில் ஓடி விளையாடிக்கொண்டிருக்கும் பஞ்சைச் சிறுவன் ஒருவனின் கழுத்தில் அந்த மாலையை அதுபோடும் —உடனே அந்தப் பையனைக் கொண்டுபோய் சிம்மாசனத்தில் உட்காரவைத்து அரசன் ஆக்குவார்கள் —என்று கதைகளில் படித்திருக்கிறேன்! ஆனால் அத்தகைய திடீர் அதிர்ஷ்டம் உண்மை வாழ்க்கையில் யாருக்கும் ஏற்பட்டதாக நான் கேள்விபடவில்லை! அத்தகைய அதிருஷ்டம் இப்பொழுது உனக்கு வந்திருக்கிறது!......ஆச்சரியமடையாதே சாமந்தி - உண்மையாகத்தான் சொல்கிறேன்! வாழ்க்கையில் எதையாவது புதுமையாகச் செய்யவேண்டுமென்று என் கணவர் சொல்வார். அவருக்கு முன்னாலேயே புதுமை செய்து காட்டப்போகிறேன்! என் தந்தை வைத்துவிட்டுப்போய் இருக்கும் சொத்து ஏராளம்! இதைப் போன்ற பெரிய பங்களாக்கள் பல! சிறியதும் பெரியதுமான வீடுகள் அநேகம்! பாங்கிலோ இலட்சக்கணக்கில் பணம்! இவ்வளவும் இருக்கும்; நான் - ஒரு ஏழைப் பெண்ணுக்கு ஏன் புது வாழ்வு அளிக்கக் கூடாது? ஏன் முடியாது?........உனக்கு ஒரு பங்களா தரப்போகிறேன் - பணம் தரப்போகிறேன் செல்வந்தனாகவும் நல்லவனாகவும், உன் கண்ணுக்குப் பிடித்தவனுமாக இருக்கும் ஒருவனுக்கு உன்னைத் திருமணம் செய்து தரப்போகிறேன்! கடைத் தெருவில் நின்று, 'ஓரணாக் கொடுங்கம்மா!' என்று கேட்ட பிச்சைக்காரி அல்ல நீ இப்பொழுது - இந்த நொடி முதல் நீ என் சகோதரி!" என்று மூச்சுவிடாமல் பேசியவளைக் கண் சிமிட்டாமல் ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள் சாமந்தி. ஏதாவது கனவு காண்கிறோமோ என்ற சந்தேகம் அவளுக்குத் தோன்றியது.

"சாமந்தி எழுந்திரு! குளித்து விட்டு வேறு புடவை கட்டிக் கொள்!"

இருவரும் அந்த அறையை விட்டு வெளியே சென்றனர்.

"இதோ இருக்கிறதே சோப்பு இதில் கொஞ்சம்கூட மீதம் வைக்கக் கூடாது அப்படித் தேய்த்துக் குளி! இதோ புடவை! புதுப்

பட்டுப் புடவை! இதைக் கட்டிக் கொண்டு வா!" என்று சிரித்துக் கொண்டே கூறிவிட்டு, குளிக்கும் அறையை விட்டு வெளியே வந்தாள் சிவகாமி.

"இரண்டு ஓவல் கொண்டுவா!" என்று சமையல்காரியிடம் கூறிவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

சிறிது நேரம் கழித்து பட்டுப் புடவையைச் சுற்றிக்கொண்டு உள்ளே வந்த சாமந்தியைப் பார்த்துப் புன்னகை செய்தாள்.

"புடவையைச் சரியாகக் கட்டத் தெரியவில்லையே - நான் கட்டிக் காட்டுகிறேன்!" என்று அவளுக்கு நாகரிகமான முறையில் புடவைகட்டி, சரிகை இழைகள் ஓடிய வெல்வெட் சோளி போட்டு, தலைவாரி பூ வைத்து முகத்திற்குப் பவுடர் அடித்து, திலகம் வைத்தாள்.

"இப்பொழுது எவ்வளவு அழகாக இருக்கிறாய் பார்!" என்று அவளை இழுத்துப்போய் நிலைக் கண்ணாடியின் முன் நிற்க வைத்தாள்.

கண்ணாடியில் தெரிவது தன் உருவம்தானா என்பதை சாமந்தியால் நம்ப முடியவில்லை.

"இது உண்மை அல்ல! நான் ஏதோ பயங்கரமான கனவு காண்கிறேன்!" என்ற சந்தேகத்தோடு தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

"இந்தா ஓவல் சாப்பிடு!" என்று சிவகாமி கொடுத்த வெள்ளிக் கோப்பையைப் பேசாமல் வாங்கிக்கொண்டாள்.

"சிறிது நேரத்திற்கு முன்பு வரை நீ பிரிச்சைக்காரியாக இருந்தவள் என்று சொன்னால், இப்பொழுது யாருமே நம்பமாட்டார்கள்! ஆடை அலங்காரம் உனக்கு எவ்வளவு எடுப்பாக இருக்கிறது!" என்று அவளைச் சிவகாமி அணைத்தபடி கட்டிலில்கொண்டு போய் உட்கார வைத்தாள்.

"இங்கேயே இரு சாமந்தி இதோ வந்துவிடுகிறேன்!" என்று சிவகாமி மான்போல் துள்ளி அறைக்கு வெளியே ஓடினாள்.

ஒன்றுமே சரியாகப் புரியாமல் திக்குமுக்காடிக் கொண்டிருந்த சாமந்தி, பெரிய தலையணை மீது சாய்ந்து கட்டிலின் தலைப்பக்க விளிம்பின்மேல் தலை வைத்தவாறு ஒருக்களித்துப் படுத்தாள். அப்படியே தூங்கியும் விட்டாள்.

"பாருங்கள் அத்தான் – நான் சொன்னால் நீங்கள் நம்பவில்லையே?"

அந்த அறையினுள் நுழைந்ததும் தன் கணவனிடம் சாமந்தியைச் சுட்டிக்காட்டி இவ்வாறு சிவகாமி கூறினாள். செயற்கரிய செயல் செய்து விட்டவளைப் போல அவள் முகத்திலும் குரலிலும் ஒருவித பெருமிதம் தாண்டவமாடியது.

"இவளா பிச்சைக்காரி?" என்று அவள் கணவன், கட்டிலில் சாய்ந்து படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தவளின் அருகில் வந்தான்.

வாட்ட சாட்டமான உடலும் வட்டமான முகமும், வசிகரமிக்க கண்களும் கொண்ட அவள், "நம்பவே முடியவில்லை!" என்ருன், சாமந்தியின் முகத்தைப் பார்த்தபடி.

"புதுமை செய்து காட்டுவதில் உங்களை நான் முந்திக்கொண்டேன் அல்லவா?" என்று குறும்போடு கூறிப் புன்னகை செய்தவள், சாமந்தி மீது வைத்தகண் வாங்காமல் ஆர்வத்தோடு அவன் பார்ப்பதைக் கண்டதும், புருவங்களை உயர்த்தினுள்.

"கள்ளங் கபடமில்லா அழகு முகம்! வளமான உடல் இவள் உலவினல் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!"

மனதில் தோன்றியதை அவன் வெளியில் கொட்டிவிட்டான்.

"நல்லவனுக ஒருவனைப் பார்த்து முதலில் இவள் திருமணத்தை முடித்துவிட வேண்டும்!"

"ஏன், நான் தான் கட்டிக் கொள்கிறேனே!"

குறும்புக்காகத்தான் இப்படி அவன் கூறினன் என்ருலும், அவள் முகம் மாறத் தொடங்கியது! இதயத்தின்மீது சாட்டையடி விழுந்தவளைப்போலத் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"ஐயாவைப் பார்க்க யாரோ வந்திருக்கிருர்கள்!" என்று அந்த நேரத்தில் வேலைக்காரி வந்து கூறவே, அவன் வெளியே சென்ருன்.

சிந்தனையோடு சாமந்தியைத் திரும்பிப் பார்த்தாள் சிவகாமி.

"கள்ளங் கபடமில்லாத அழகு முகம்! இவள் உலவினல் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!"

கணவனின் இந்தச் சொற்கள் அவளைச் சுற்றி வட்டமிட்டன.

"இவள் அழகு முகம் என் அத்தானின் நெஞ்சைப் போதை கொள்ளச் செய்துவிட்டால்?"

அவள் பெண் மனத்தில் இருட் கோடுகள் பின்னவிட்டன.

பேதைப் பெண்ணின் சிந்தனை கொந்தளித்தது. களைத்து ஓய்ந்த கண்களுக்கு எவ்வாறு, எல்லாம் இரண்டாகத் தெரியுமோ, அவ்வாறே அவள் உள்ளத்தில் சகல விஷயங்களும் வாதமும் எதிர்வாதமுமாக, இரண்டு இரண்டாகப் பிரிந்து நின்றன.

"இவள் வாழ்வை வளர்பிறை ஆக்கப்போய், என் வாழ்வைத் தேய்பிறையாக்கிக் கொள்வதா?" என்ற உள்ளுணர்ச்சி அவள் நெஞ்சில் அலைமோதியது.

நிலைக்கண்ணுடியின் முன்பு போய் நின்ருள். அவளையும்

தன்னையும் மாறிமாறிப் பார்த்தாள்.

"இவள் உலவினால் இந்தப் பங்களாவே ஒரு தனி அழகைப் பெறும்!" யாரோ கடகடவென்று கர்ணகடூரமான குரலில் கெக்கலி கொட்டிச் சிரிப்பதைப்போன்ற பேரலைச் சப்தம், அவள் தலையைச் சுற்றிச் செய்தது.

கண்ணை மூடியபடி ஒரு கணம் மௌனமாக நின்றாள். மறு கணம் பீரோவைத் திறந்து பத்து ரூபாய் நோட்டுகள் ஐந்தை எடுத்தாள். எடுத்ததில் நான்கைத் திரும்பவும் வைத்துவிட்டு, ஒன்றைக் கசக்கி உள்ளங் கையில் மூடிக்கொண்டு கட்டிலின் அருகில் வந்தாள்.

"சாமந்தி!"

"சாமந்தி!"

"சாமந்தி! ஏ, சா ம ந் தி! சாமந்தி!"

உரக்க அழைத்தும் அவள் விழிக்காததினால், உலுப்பி எழுப்பினாள்.

சாமந்தி திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள்.

"இந்தா!" என்று பத்து ரூபாய் நோட்டை வெறுப்போடு அவளிடம் கொடுத்தாள்.

அதைப் பிரித்துப் பார்த்தபடி "இதென்னம்மா?" என்றாள் சாமந்தி.

"உனக்குப் பிச்சை!" கடுகடுத்த முகத்துடன் கோபமும் வெறுப்பும் கலந்த குரலில் சிவகாமி கூறினாள்.

"பிச்சையா?"

சாமந்தியின் முகத்தில் கவலையும் பரபரப்பும் நிழலாடின. கையிலிருந்த நோட்டுத் தரையில் விழுந்தது.

"இந்த வீட்டில் இனி ஒரு நொடிகூட நீ இருக்கக் கூடாது! வெளியே போய்விடு!" சிவகாமி உறுமினாள்.

"சரியம்மா!";

"இதை எடுத்துக்கொள்!" என்று புருவத்தை நிமிர்த்தித் தரையில்கிடந்த பத்துரூபாய் நோட்டைச் சுட்டிக்காட்டினாள், சிவகாமி.

"வேண்டாம் அம்மா!" என்று வார்த்தைகளால் அல்ல, தலை அசைவால் கூறிவிட்டுக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள், சாமந்தி.

வாயிற்படியை நோக்கி நடந்து சென்றவளைப் பார்த்தபடி கட்டில் மீது உட்கார்ந்த சிவகாமி, நீண்டதொரு பெருமூச்சு விட்டாள்.

"திராவிட நாடு

★ செய்திகள் ★

ஆசிரியர்கள் கல்வி யாத்திரைக்கு மத்திய சர்க்கார் மானியம்

1959-60லும் தொடர்ந்து வழங்கப்படும்

புதுடில்லி, மே 1-ஆசிரியர்களுக்கான கல்வி யாத்திரைத் திட்டத்தை 1959-60 லும் தொடர்ந்து நடத்த மத்திய கல்வி அமைச்சு தீர்மானத்திருக்கிறது. ஆகவே, அது சம்பந்தமான யாத்திரைத் திட்டத்தை கூடிய சீக்கிரத்தில் அனுப்பும்படி ராஜ்ய சர்க்கார்களையும், யூனியன் பிரதேசங்களையும் அது கேட்டிருக்கிறது.

ஆசிரியர்கள் கல்வி சம்பந்தமான இடங்களுக்கும் கலாசார, சரித்திரம் பிரசித்தி பெற்ற இடங்களுக்கும் செல்வதை ஊக்குவிப்பதற்காக ராஜ்ய சர்க்காருக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் மத்திய கல்வி அமைச்சு மானியம் வழங்கி வருகிறது.

இந்தத் திட்டம், இளைஞர் க்ஷேமநலத் திட்டத்தின்படி கல்வி அமைச்சு நடத்தி வருகிற இன்னொரு திட்டத்திற்கு முற்றிலும் வேறுபட்டதாகும். அந்தத் திட்டம் 15 வயது முதல் 24 வயது வரையுள்ள மாணவர்களுக்கும் அவர்களை அழைத்துச் செல்கிற ஆசிரியர்கள் விஷயத்திலும் அமுலாகும். இவ்விஷயத்தில் ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் கல்வி கற்கிற மாணவ ஆசிரியர்கள், மாணவர்களாக மானியம் பெறலாம்.

ஆசிரியர்களுக்கான கல்வி யாத்திரைத் திட்டங்கள், ஆரம்பப் பாடசாலைகள், ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் பயிற்சி நிலையங்கள், ஆதாரப் பாடசாலை ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் ஆகிய நிலையங்களிலுள்ள ஆசிரியர்களுக்காக மட்டுமே தயாரிக்கப்பட்டிருப்பதால் ஆசிரியர்களடங்கிய கோஷ்டிகளுக்குத்தான் முன்னிடச் சலுகை வழங்கப்படும். ஆனால், ஆசிரியர்களோடு சில ஆசிரிய மாணவர்களும் செல்வதற்குத் தடையில்லை. அந்தக் கோஷ்டியுடன் செல்கிற சிப்பந்திகளுக்கு இந்த அனுகூலங்கள் கிடைக்காது.

அமெரிக்காவுக்கு மூட்டைப் பூச்சி ஏற்றுமதி!

அவுன்ஸ் ரூ. 25!

கராச்சி, ஏப் 28 அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் மூட்டைப் பூச்சி ஏற்றுமதி செய்யும் பத்திரிகையில் வெளியான விளம்பரம் கூறுவதாவது :—

“மூட்டைப் பூச்சிகளைக் கொல்லாதே. அமெரிக்காவுக்கு விற்று விடு”

உயிருள்ள மூட்டைப் பூச்சி ஒரு அவுன்சுக்கு 25 ரூபாய் தருவதாகக் கூறப்பட்டிருந்தது.

விளம்பரக்காரரை விசாரித்ததில் தங்களிடம் இரண்டவுன்சு மூட்டை பூச்சிகள் கிடைத்திருப்பதாகவும், அவற்றை அமெரிக்க மருந்து தயாரிப்புக் கம்பெனிக்கு விற்கப்போவதாகவும் தெரிவித்தார். மூட்டைப்பூச்சிகள் விமானத்தில் ஏற்றிச் செல்லப்படும் என்று விமானத்தில் பறந்து செல்லும்பொழுது உயிருடன் இருப்பதற்காக அமெரிக்க மருந்து கம்பெனி பிரத்தியேகமான உணவை காராச்சிக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்தார்.

"நவ இந்தியா"

எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய ஆரம்பக்கல்வி

1966–67 ல் அமுலாக்க சென்னை அரசினர் முடிவு

உதகை, ஏப். 29 6-வயது முதல் 11 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் எல்லா இடங்களிலும் 1966—67-ம் ஆண்டிவாக்கில் கட்டாய ஆரம்பக் கல்வி அமுலாக்க சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறது என்று படிப்பமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் நேற்று சென்னை சட்டசபையில் அறிவித்தார்.

இதற்கான விவரமான திட்டம் தொகுக்கப்பட்டு வருவதாகவும் மந்திரி கூறினார். சட்டசபைக் கமிட்டி தெரிவித்த யோசனைப் படி இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றார்.

இந்தப் படிப்பு ஏற்பாடு பற்றிய யோசனைகளை மத்திய சர்க்கார் கடந்த ஆண்டு ராஜ்ய சர்க்காருக்கு அனுப்பியதாகவும் மந்திரி திரு. சி சுப்பிரமணியம் திரு. என். கே. பழனிசாமிக்குப் பதிலளித்தார்.

பெற்றோர் சட்டம்

இது சம்பந்தமாக கேட்ட துணைக் கேள்விகளுக்குப் பதிலளித்த படிப்பமைச்சர். தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புமாறு பெற்றோர்களைக் கட்டாயப்படுத்தும் சட்டம் எதுவும் இப்போது அவசியமில்லை என்றார். மத்திய உணவு ஏற்பாடே எல்லாக் குழந்தைகளும் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போக வசீகரிக்குமென்று தான் நம்புவதாகவும் மந்திரி கூறினார்.

'நவ இந்தியா"

ஆதாரக் கல்வியின் நோக்கம் யாது?

கவர்னர் காட்கில் கேட்கிறார்

இராசிபுரம், ஏப். 29 "மக்கள் சேவையில் உற்பத்தியுடன் கல்வி இணைந்திருப்பதுபோல் ஏற்பட்டால், ஆதாரக் கல்விமுறை இறுதியில் மிகவும் மலிவாகி விடும்.

"ஆதாரக் கல்வியின் பயனைப் கல்வித் துறையினர் மதிப்பிட்டு, அதன் இலட்சியங்களை எடுத்து வைக்கவேண்டும்.

"சாதாரணமாகக் கல்வி பயி லும் மாணவனைவிட ஆதாரக் கல்வி பயின்ற மாணவன் எவ் வாறு மேலானவன் என்பது புலப்படவில்லை.

"நம்முடைய கல்வி, சமுதாயத் தின் தேவைகளை ஈடுசெய்யக் கூடியதாக இருக்கவேண்டும்.

"சாதாரண அடிப்படையில் கல்வி பயின்ற மாணவனைவிட, ஆதாரக் கல்வி அடிப்படையில் கல்வி பயின்ற மாணவன் மேலா னவன் என்று இதுவரை உறுதிப் படுத்தப்பட வில்லை."

என்று பஞ்சாப் மாநில கவர் னர் என். வி. காட்கில், அனைத் திந்திய ஆதாரக் கல்வி மாநாட் டில் பேசி யிருக்கிறார்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்த ஆரிய நாயகம், ஆளவந்தார்களி டையே ஆதாரக் கல்வி பற்றி நம் பிக்கை இல்லை என்றும், இப்போ தைய கல்வி முறையை மாற்றி அமைக்கத் துரிதநடவடிக்கைகள் மேற்கொள்வதில் நிலவிய ஐயப் பாடு, ஆதாரக் கல்வி வளர்ச்சி யைக் கட்டுப்படுத்தியது என்றும் ஆளவந்தார்கள் பழைய கல்வி முறைக்கு அளித்த ஆதரவின் பயனாக ஆதாரக் கல்வி பின்தங்கி விட்டது என்றும் குறிப்பிட்டுப் பேசினார்.

"பின்தங்கிய பகுதிகளில் குடி யிருக்கும் குறைந்த வருமான முள்ளவர்களுக்கே ஆதாரக்கல்வி என்ற கருத்து, பரவலாகிவிட் டது.

"ஆதாரக் கல்வி பயின்றவர் களுக்கு உயர்நிலைக் கல்வியும், பல்கலைக் கழகத் தொழில் நுணுக் கக் கல்வியும் பெறும் வாய்ப்புக் கிட்டாத நிலை நிலவுகிறது" என்றும் அவர் குறிப்பிட்டார்.

சென்னை மாநிலத்தின் பள்ளிகள்

அமைச்சர் தரும் தகவல்

உதகை, ஏப். 30 சென்னை மாநி லத்தில் ஆண்களுக்கென 759 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன; இவற்றில் 4,30,900 மாணவர்கள் படித்து வருகின்றனர்.

சென்னையில் 48; மதுரையில் 56; கோவையில் 82 பள்ளிகள் உள்ளன.

சென்னை மாநிலத்தில் பெண் களுக்காக 156 பள்ளிகள் இருக் கின்றன; இவற்றில், 81,532 பெண்கள் படிக்கின்றனர். சென்னை நகரில் மட்டும் 27 பள்ளி களில் 20,052 பேர் படிக்கின்ற னர்.

சென்னை மாநிலத்தில் ஆதாரப் பள்ளிகளாக இராத ஆரம்பப் பள்ளிகள் 21,003 இருக்கின்றன. ஆரம்ப ஆதாரப் பள்ளிகள் 2,700 உள்ளன; முறையே 24,66,000 சிறுவர்களும், 4,15,135 சிறுமி களும் இந்தப் பள்ளிகளில் படிக் கின்றனர்.

ஓய்வு பெறும் ஆசிரியர் பற்றி சர்க்கார் உத்தரவு

ஒரு பள்ளிக்கூடம் இயங்கும் போது கல்வி ஆண்டு முடிவதற்கு

பூண்பு ஆசிரியர்கள் ஓய்வு பெற வேண்டிய காலம் வந்தால், அந்தக் கல்வி ஆண்டு இறுதிவரை அந்த ஆசிரியர்களை வேலைக்கு வைத்திருக்கலாம் என்று சென்னை அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

தனியார் நடத்தும் பள்ளி நிர்வாகிகளுக்கு இந்த முடிவு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

முதியோர், குழந்தைகள் கல்விக்கு ஆக்கந் தர அரசினர் ஏற்பாடு

புத்தகங்கள் தயாரிக்க ஆய்வுக் குழு நியமனம்

சென்னை, ஏப். 30 முதியோர் கல்விக்காகவும் குழந்தைகள் கல்விக்காகவும் அவர்களின் உள்ளப்பாங்கு, விருப்பு வெறுப்பும், அகராதி பாட விஷயங்கள் ஆகியவற்றை அலசி ஆராய்ந்து உகந்த முறையில் புத்தகங்களை வெளியிடுவதற்கான வழிவகைகளை வகுக்க சென்னை அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்துள்ளது.

முதியோர் குழந்தை கல்விக்கான இலக்கிய ஆராய்ச்சி, நூல் பதிப்பு கமிட்டி என இக்கமிட்டி வழங்கப்படும் என்று சர்க்கார் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கமிட்டி உறுப்பினர்கள் விவரமாவது :—

இலங்கை பல்கலைக் கழகக் கல்வித்துறைத் தலைவர் பூஜியர் சேவியர் தனிநாயகம் கமிட்டியின் தலைவர். சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி முதல்வர் திரு. எம். ஆர். பெருமாள் முதலியார் கோவை பெரியநாயக்கன் பாளையம் கிராம உயர்தர கல்வி நிலைய முதல்வர் திரு. அறம்வளர்த்த நாதன் பிள்ளை, கோவை பி. எஸ். ஜி. கலைக்கல்லூரி முதல்வர் திரு. பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி பாடப்புத்தக விசேஷ அதிகாரி திரு. எஸ். வடிவேலு, திரு. அழ. வள்ளியப்பா ஆகியோர் உறுப்பினர்களாயிருப்பார்கள். திரு. வி. கன்னையன் காரியதரிசியாக இருப்பார்.

மேற்கொண்டு கமிட்டி விரும்பினால் மூவரைச் சேர்த்துக் கொள்ளவும் கமிட்டிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

மூன்று மாத காலத்திற்குள் கமிட்டி தனது முதல் அறிக்கையைச் சமர்ப்பித்துவிட வேண்டும்.

அமெரிக்காவில்
திராவிட நாகரிகம்!

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அதற்குமுன்னால் அங்குக் குடியேறியிருந்தவர்கள் யார்? அங்கு யாருடைய நாகரிகம் பரவியிருந்தது? என்பது ஆராய்ச்சிக்குரிய பெரிய காரியமாகும். இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர் பிச்சுசாமன்லால் என்பவராவர். இவர் ஒரு காலத்தில் பெரிய எழுத்தாளர்; புரட்சிக்காரர்கூட, நாகரிக ஆராய்ச்சி வயப்பட்டு, இவர் உலக முழுவதையும் சுற்றித் திரிந்து ஆங்காங்கே, சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்தில் சிதறிக் கிடந்த நாகரிகக்கலைகளையும், சிற்பங்களையும், இடிந்துகிடந்த கோயில்களையும் பாழடைந்து கிடந்த சரித்திர சம்மந்தப்பட்ட கட்டிடங்களையும் நேரில் சென்று பார்த்துப் படங்களும் எடுத்து வைத்திருக்கிறார். மெக்சிகோ, பெரு, கௌதமாலா, சைனா, சியாம், இந்தோசைனா, இந்தோனேசியா, ஜப்பான் போன்ற இடங்களிலிருந்து, போட்டோக்கள் மூலம், அவ்விடங்களில் பரவியிருந்த நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம் முதலியவைகளை ஆராய்கிறார். கிண்டி கவர்னர் மாளிகையில், இவர் எடுத்து வைத்திருந்த போட்டோக்களை ஒன்று சேர்த்து அவைகளின் தொகுப்புக்களை காட்டப்பட்டது. அப்படங்களிலிருந்து, பிச்சுசாமன்லால், கொலம்பசுக்குமுன்னால் அமெரிக்காவில் குடியேறியவர் தென்னிந்தியர்கள். அதாவது திராவிடர்கள் என்று தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறார்.

பிச்சுசாமன்லால் தன்னுடைய பேச்சில் குறிப்பிட்டதாவது:—

3000 வருடங்களுக்கு முன் மத்திய அமெரிக்காவில் குடியேறியவர்கள் யார்? தென்னிந்தியர்கள். சான்றுகள் என்னால் கொடுக்க முடியும் என்று பற்பல சான்றுகளைக் கூறுகிறார். மெக்சிகோதேசத்து தஸ்தாவேஜுகளிலிருந்தும், மெக்சிகோ தேச சரித்திரத்திலிருந்தும், ஊகிப்பது என்னவென்றால், அமெரிக்காவில் 100 ராஜ்யங்களும், தென்னிந்தியர்களால் ஆட்சி செய்யப்பட்டன என்று மெக்சிகோ சர்க்கார் தஸ்தாவேஜுகள் கூறுகின்றன. இந்த ராஜ்யங்களை ஆண்ட கடைசித் தென்னிந்தியர், ஸ்பானியர்களால் தோற்கடிக்கப் பட்டுக் கொல்லப்பட்டார். உடனே, கொலை செய்யப்பட்ட அரசனின் மனைவிமார்கள் 4 பேர்களும் தீயில் இறங்கி செத்தார்கள். அமெரிக்கா தேசத்து சரித்திர நிபுணர்கள், "முதல் முதலில் அமெரிக்காவில் குடியேறியவர்கள்; வீரர்கள்; அவர்கள் தென்

னிந்தியர்கள்" என்று தகுந்த தஸ்தாவேஜுகள் மூலமாக என்னிடம் விளக்கி யுள்ளார்கள். அமெரிக்காவில் காணப்படுகிற அநேக கட்டிடங்கள் திராவிட நாட்டின் கட்டிடங்களை ஒத்திருக்கின்றன. சிம்மாசனம், பத்மாசனம் இவைகளை இன்றும், அமெரிக்காவில் பாழடைந்து போயிருக்கிற கட்டிடங்களில் பார்க்கலாம். மெக்சிகோவில் அழிந்து பாழடைந்துபோய் ஒரு கோயில் இருக்கிறது. அந்தக் கோயில் பெயர் "மிதிலா" வாகும். "ராஜபுரம்" என்று ஒரு பழைய நகரம் அமெரிக்காவில் இருந்தது; யோகஸ்தான் என்று ஒரு இடம் மெக்சிகோவில் இருந்ததாம்.

அமெரிக்காவில் இடிந்த பல கட்டிடங்கள் இருந்தன. அந்தக் கட்டிடங்களில் அநுமான், லிங்கம், விஷ்ணு என்று சொல்லக் கூடிய கடவுள்களின் சிற்பங்கள் பொறிக்கப் பட்டிருந்தன. ராம அவதாரம், நரசிம்ம அவதாரம், துர்கா அவதாரம் ஆகிய அவதாரங்கள் அமெரிக்காக் கட்டிடங்களில் காணப்படுகின்றன.

ராமாயண, மகாபாரத இலக்கியங்களும் இடம் பெறுகின்றன. யானைகள் அமெரிக்கக் கட்டிடங்களில் செதுக்கப் பட்டிருப்பதிலிருந்து என்ன தெரிகிறது? அமெரிக்கர்களுக்கு யானையைப் பற்றி தெரியாது. இந்த யானையை அங்குள்ள கட்டிடத்தில் செதுக்கியவர் திராவிடர்கள்தான்!

அமெரிக்காவில் முன்னால் இருந்த ஒரு ராஜ்யம் பெயர் சோழ ராஜ்யம். சோழ ராஜ்யம் அங்கு இருந்தது என்பதற்குத் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. சோழ ராஜ்யத்தை அங்கு அமைக்கக் காரணமாக யிருந்தவர்கள் திராவிடர்கள்தான்.

கட்டு மரம், சுண்ணாம்பு என்ற தமிழ் வார்த்தைகள் அமெரிக்காவிலும் பேச்சு வழக்கில் இருக்கிறது. அமெரிக்காவிலுள்ள பெரு என்ற பட்டணத்திலுள்ளவர்கள், தமிழர்கள் உபயோகிக்கிற சுண்ணாம்பு, கட்டு மரம் என்ற தமிழ் வார்த்தைகளை அதே அர்த்தங்களில் உபயோகிக்கின்றனர்.

பெருவிலுள்ள புதை பொருள் ஆராய்ச்சியிலிருந்தும், நடைமுறையிலிருந்தும் மேலே உள்ள கருத்துக்கள் தெரிய வருகின்றன.

மாளத்தீவிலுள்ள நடனங்கள் படங்கள் மூலம் காட்டப்பட்டன. அங்குள்ள பெண்கள் உடை அணிந்திருப்பது மலபார் பெண்கள் உடை அணிந்திருப்பது போலிருக்கின்றன.

அமெரிக்காவிலுள்ள மாளத்தீவிலுள்ள மக்கள் உரல், உழக்கு இவைகளை நெல்லிலிருந்து உமியை அப்புறப்படுத்த உபயோகிக்கின்றனர். உரல், உழக்கு தமிழ் நாட்டில் வழங்கும் சொற்கள். இவைகளிலிருந்து தெரிவது என்ன? மத்திய அமெரிக்காவில், கொலம்பசுக்கு முன்

குடியேறியவர்கள். தமிழர்கள் என்று தெரியவருகிறது. மாளத் தீவிலுள்ளவர்கள் அரிசிச் சோறு சாப்பிடுகிறார்கள். இரட்டை மாடு கள் பூட்டிய வண்டிகள் அங்கு ஓட்டப்படுகின்றன. கரகம், நடனம் அங்கு இடம் பெறுகின்றன.

இப்படியாக, பிச்சுசாமன்லால், அமெரிக்காவில் தென்னிந்திய நாகரிகம் பரவியிருந்ததைப் படம் மூலம் விளக்கிக் காட்டினார்.

கொலம்பசுக்குமுன்னல் அமெரிக்காவை நம்மவர்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள் என்றும் அமெரிக்கோ சரித்திரம், புதை பொருள் ஆராய்ச்சி, இடிந்து போன பழைய கட்டிடங்கள் அங்கு வழங்கும் சொற்கள் இவைகள் தெள்ளத் தெளிய காட்டுகின்றன என்றும் உலகம் சுற்றிய ஒரு பெரிய எழுத்தாளரான பிச்சுசாமன்லால் அவர்கள் கவர்னர் மாளிகையில் தாம் எடுத்த போட்டோக்கள் மூலம் விளக்கியதிலிருந்து நம்-திராவிட நாகரிகம், தலைசிறந்த நாகரிகம் என்று தெரியவருகிறதல்லவா?

—"தனி அரசு"

32-ம் பக்கத் தொடர்ச்சி

பெரும்பான்மையான மனைவிமார்கள், தமது கணவன்மாரிடம் அன்போடு இருந்தால், அவர்கள் இன்னும் நீடித்து உயிர் வாழ்வர் என்று இவ்வாசிரியை வற்புறுத்திக் கூறுகிறார்.

—"தினமணி சுடர்"

ஊனர்கள் நடத்தும் வாணிப நிலையம்

பிராங்கோயின்பார்க், இலினாய்ஸ்—பலவீன மானவர்களும் உடல் ஊனமுள்ளவர்களும் நடத்தும் வாணிப நிலையம் ஒன்றிருப்பதாக 'எபனி' என்ற நீக்ரோ தேசிய சஞ்சிகை எழுதுகிறது. ஆண்டுக்கு 5 லட்சம் டாலர் மதிப்புள்ள வாணிபம் நடத்துகிறது அந்நிலையம். இதன் சொந்தக்காரர் இளம் பிள்ளை வாத நோய்க்கு இரையானவர். இடுப்புக்குக் கீழே அவருக்கு விளங்காது. அவர் பெயர் டுவைட்கல் பாய்ல். உடல் ஊனர்களுக்கு உதவும் உறுப்புகளின் மின்சாரப் பாகங்களை உற்பத்தி செய்யும் நிலையம் அது. சக்கரங்கள் பொருத்தப்பட்ட நாற்காலியில் அமர்ந்த வண்ணமே அவர் தம் வேலையைப் பார்க்கிறார்.

சில ருசிகரமான செய்திகள்

இறந்த பிறகும் கடன் தீர்த்த எழுத்தாளர்

ஸர் வால்ட்டர் ஸ்காட் என்ற புகழ் பெற்ற நூலாசிரியருக்கு 130,000 பவுன் கடன் இருந்தது. கதை எழுதி சம்பாதித்தே இந்தக்கடனை அவர் அடைத்தார். சற்றும் ஓய்வில்லாமல் உழைத்து உழைத்தே அவர் அகால மரணமடைந்தார். ஏழாண்டுக் காலத்தில் அவரால் 90,000 பவுன் கடனைத்தான் தீர்க்க முடிந்தது. அவர் இறந்த பிறகு அவர் புத்தகங்களுக்குக் கிடைத்த வருமானத்தைக் கொண்டு ஐந்தே ஆண்டுகளில் பாக்கிக் கடனும் தீர்க்கப்பட்டது.

விசித்திரச் சாதனைகள்

எத்தனையோ மனிதர்கள் பந்தயத்திற்காகவும் சவாலை ஏற்கவும் மற்றவர்கள் சாதாரணமாகச் செய்யாத காரியங்களைச் செய்ய முற்படுகிறார்கள்.

மூன்று ஆக்ஸ்பர்ட் மாணவர்கள் அண்மையில் ஆக்ஸ்பர்டிலிருந்து லண்டனுக்கு 55 மைல் தூரம்-20 மணி நேரத்தில் நடந்தனராம். இதே போல் வேறு மூன்று மாணவர்கள் நடந்ததை விட அவர்கள் வேகமாக நடந்து காட்டினராம். இதற்குப் பந்தயம் சுமார் ஆறணா!

நடன நிபுணர் ஒருவர் சேர்ந்தாற்போல் 24 மணி நேரம் ஆடி, தம் வல்லமையைக் காட்டினார். பியானோ நிபுணர் ஒருவர் இடைவிடாது 150 மணி நேரம் வாசித்து 'உலக ரிக்கார்ட்' ஏற்படுத்தினாராம். புதிய செருப்பு ஒன்றைப் பரிசீலிக்க நியூகாஸிலிலிருந்து லண்டனுக்கு (280 மைல்) ஒருவர் கொட்டும் மழையில் நடந்து காட்டினார்.

மனித குண விசித்திரங்களிலேயே இந்தச் சாதனைகளில் திருப்தியடைவதும் ஒன்று. ஆனால் இவை அவசியமா?

விமானம் நொருங்க டீக்கு வந்த தம்பதி

இங்கிலாந்தில் ஹார்ன்சர்ச் என்னும் இடம். மாலை நேரம். இருட்டும் சமயம். ஒரு பெரிய மைதானத்தின் பக்கத்தில் இருந்த ஒரு பேட்டையினர் பதைபதைத்தனர். வீடுகளுக்கு சில அடிகள் உயரத்திலே ஒரு விமானம் கீழே இறங்கத் தெரியாமல் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது. மைதானத்தில் அதை இறக்க முயன்றார் விமானி. மூன்று முறை முயன்றும் முடியவில்லை. கடைசியில் ஒரு வீட்டின் புழக்கடையில் தெய்வாதீனமாக யாருக்கும் சேதமில்லாமல் விமானம் இறங்கியது.

அப்போது வீட்டுக்காரி டீ தயாரித்துக் கொண்டிருந்தாள். விமானத்திலிருந்து ஒரு கணவ

னும் மனைவியும் இறங்குவதைக் கண்டான். 'வாருங்கள், டீ குடிக்கலாம்'' என்று அழைத்தாள்

டீ குடித்தவாறே, அந்த விமானக் கணவன், தான் மனைவியோடு உல்லாசப் பிரயாணம் செய்யும்போது, சேர்ந்த விபத்தை விவரித்தான்.

அழகுக்கா காதல் ?

பிரெஞ்சு நாட்டில் சமீபத்தில் பல ஆண்களை 'பெண்களிடம் நீங்கள் விரும்புவது என்ன?' என்று கேட்கப்பட்டது. 20 முதல் 25 வயது வரை உள்ள ஆண்கள் ''அழகு'' என்பது நாலாவது பொருளாகத்தான் குறிப்பிட்டார்கள். 26-40 வயதுக்காரர்கள் அழகை ஆறுவதாகக் குறிப்பிட்டார்கள். 40 வயதுக்கு மேற்பட்டவரோ வேறு ஏழு விஷயங்களைக் குறிப்பிட்டுவிட்டு அழகை எட்டாவதாகவே குறிப்பிட்டார்கள்.

நவீன லக்ஷ்மணன் !

பதினன்கு ஆண்டுகள் லக்ஷ்மணன் தூங்காது இருந்ததாக இராமாயணம் கூறுகிறது.

யூகோஸ்லாவியாவில் பிராங்கோ மைகூலிக் என்னும் ஓர் இளைஞன் சென்ற 16 ஆண்டுகளாகத் தூங்காமல் இருப்பதாக ராய்ட்டர் செய்தி கூறுகிறது.

இரண்டாம் உலக யுத்தத்தில் அவன் குழந்தையாக இருந்தபோது, ஒரு நாள் அவனுடைய வீடுபற்றி எரிந்து விட்டது. அப்போது அவன் தூக்கம் கெட்டது. இன்று வரை அவன் இரவில் தூங்கவில்லை. படுக்கையில்படுத்து மனக்கணக்குப் போட்டுப் பொழுது போக்குகிறான்.

கிறிஸ்து பிறந்தது முதல் இது வரை எத்தனை விநாடி, நிமிஷம், மணி ஆயிற்று என்று கேட்டால் இரண்டே நொடியில் விடை கூறி விடுகிறான். இதுபோன்ற கணக்குகள் பலவற்றை அவன் சளைக்காது போடுகிறான்.

மனைவிமாரே ! கணவரை கொல்லாதீர் !

ஸ்ரீமதி ஹன்னலீஸ் என்னும் அமெரிக்கப் பெண்மணி 'உங்கள் கணவரை உயிர்வாழ விடுங்கள் !' என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். பல ஆண்டு ஆராய்ச்சிக்குப் பிறகு அவர் இவ்வாறு கூறுகிறார்:

அமெரிக்காவில் விதவைகள் தொகை பெருகுகிறது. 40 வயதுக் காரரில் 10 பெண்மணிகள் காலமானால் 17 ஆண்கள் மரிக்கிறார்கள். 50 வயதுக்காரரில் 10 பெண்கள் காலமானால் பதினெட்டு ஆண்கள் மரிக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இவ்வாண்டில் லட்சம் விதவைகள் பெருகிவிட்டார்கள். நிறைய சம்பாதிக்க வேண்டும். மனைவிமார் கேட்பதையெல்லாம் வாங்கிக் கொடுத்து அவர்களை திருப்தி செய்ய வேண்டும்' என்ற ஆவலில் உழைத்து உழைத்தே ஆண்கள் இறந்து விடுகிறார்கள்! என்கிறாள் இந்த அம்மாள்.

சென்ற இதழ் தொடர்ச்சி :—

மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

காட்சி 34

1 அக்டோபர்—1801

மங்கலம்

பறங்கியரின் போர் முகாம்.

(கர்னல் அக்நியு, கர்னல் இன்ஸ், தொண்டைமான், கறுத்தான் முதலியோரின் எதிரில் முகம்மது கலீலும், முனியம்மாவும்...)

முனியம்மா :—ஆமாங்க, எசமான்! நான்தான் இவரைக் கூட்டி வந்தேன். எல்லா இரகசியத்தையும் உங்ககிட்ட சொல்லிட்டோம். இனி நீங்க சொல்றபடி நடந்துக்கிறோம்.

தொண்டை :—அதுதான் அறிவுடையோருக்கு அழகு.

கலீல்:—மருதய்யங்க இருக்கிற இடத்தைச் சொல்றவங்களுக்கு நூறு பவுன் தருவதா சொன்னீங்களாமே...எங்களுக்கும் பணம்...

அக்நியு :—தருகிறோம்! மிஸ்டர் இன்ஸ்! முனியம்மாவைச் சிறையில் வையுங்கள்......

முனியம்மா :—(திடுக்கிட்டு) எசமான்......

அக்நியு :—உஸ்...பேசாதே! உனக்கு அரசியல் விவகாரத்தைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஏய் கறுத்தான்! என்ன 'மேன்' நிக்கறே...?

(கறுத்தான் முனியம்மாவின் கைகளில் விலங்கைப் பூட்டி சிறைக்கு அழைத்துப் போகிறான்.)

அக்நியு :—(கலீலைத் தட்டிக்கொடுத்து) பயப்படாதே, மிஸ்டர் கலீல்! நாளைக்கு மனம் மாறி, நம்மையும் மற்றவரிடம் காட்டிக் கொடுக்கக்கூடாது என்பதற்காகவே அவளை சிறையில் தள்ளினேன். பரிசைத் தருகிறோம்; நீ பெற்றுக்கொள்.

(பொன் முடிப்பைத் தருகிறான்.)

தொண்டை :—அடுத்த திட்டம்...?

அக்நியு :—எக்காளமிட்டுத்திரியும் அந்த விடுதலைப் பட்டாளத்தைப் பிடித்தாக வேண்டும். நேற்று கர்னல் ஸ்பிரே கவில் கூறிய வழியில் புறப்பட்டு விட்டார், அல்லவா? இன்று நான் முத்தூர் வழியாக காளையார் கோவிலுக்குச் செல்கிறேன். மிஸ்டர் இன்ஸ்...!

இன்ஸ் :—சார்......

அக்நியு :—நீர் தாளான்குடி கிரனூர் வழியாக சென்று தாக்குங்கள்.

தொண்டை :—முப் பெருந் தளபதிகள் மூன்று பக்கத்திலும் தாக்குகிறீர்கள்.

அக்நியு :—ஆம். மும்முனைத் தாக்குதல்...மூச்சு விடாமல் தாக்க வேண்டும்.

தொண்டை :—இன்றோடு காளையார் கோவில் போராட்டத்தின் கடைசி மூச்சு நின்று விடும்

— திரை —

காட்சி 34 (ஆ)

— நிழற் காட்சி —

(பறங்கியருக்கும் மருது பாண்டியர்க்கும் பயங்கரப் போர். 'டுமீல்—டுமீல்' என்று துப்பாக்கிகள் சுடும் ஒலி. 'டமார்...டமார்' என பீரங்கிகள் வெடிக்கும் சத்தம். எங்கும் ஒரே புகையும் ..... குழப்பமும் .....! வாட்கள் ஒன்றோடு ஒன்று மோதி உராயும் ஒலி...பயங்கரமான முனகல்களும் சத்தாய்களும் எழுந்து ஓய்கின்றன.)

காட்சி 35

நடு நிசி

காளையார் கோவில்

காடு.

(மருது பாண்டியர், ஊமத்துரை, துரை சாமி ஆகியோர். விடுதலை வீரர்கள் சிலர்

சுற்றி நின்று வெளிச்சத்திற்காக தீப்பந்தங்களை ஏந்தி நிற்கின்றனர்.)

ஊமத்துரை :—முத்தய்யன்...நம்பிக்கையுள்ள ஒரு தொண்டன்... நெடுநாட்களாகக் காணவில்லை...அவனை இழந்து விட்டோம்! காளையார் கோவில் ஒரே ஒரு பாதுகாப்பிடம்...அதையும் பறி கொடுத்து விட்டோம்! நெஞ்சு பொறுக்க முடியாத நிகழ்ச்சிகள்... (வஞ்சகத்துடன்) பறங்கிக்காரர்களின் இதயங்களைக் கிழித்து, வழிந்தோடும் இரத்தத்தை அள்ளிக் குடித்தால்தான் என் சுதந்திரத்தாகம் தணியும்.

பெ. மருது :—தணியாத விடுதலைத் தாகத்தைத் தணித்துக்கொள்ள பிணக் குவியல்களிடையே புரளுவோம; இரத்த வெள்ளத்திலே நீச்சலடிப்போம்.....துவண்டு போன நம் தோள்களைத் தூக்கி நிறுத்திப் போராடுவோம்! உலுத்துப் போனவர்களும் உதவாக்கரைகளும் ஒன்று சேர்ந்து போராடினார்கள் ......நாம் வீழ்ந்தோம்...! அப்போது தன்மானம் உள்ளவரும் தறுகண் ஆண்மை மிக்க வருமான நாம் பிரிந்து நின்று போராடுவோம்...சதிகாரர்கள் வீழட்டும்...! வெற்றி நமதாகட்டும்!

தம்பி சின்ன மருது! சிங்கம் நிகர் ஊமத்துரை! மகனே துரைசாமி! மானமே பெரிதென வாழும என உயிர்த் தோழர்களே! நீங்கள் இப்போதே நாலா பக்கங்களிலும் ஓடுங்கள். பகலில் காடுகளில பதுங்கியிருங்கள்....இரவில் நாட்டின் மூலை முடுக்குகளில, நமக்காகப் போராடத் துடிததுக் கொண்டிருக்கும இளங்காளைகளை ஒன்று திரட்டுங்கள். பெரும படை ஒன்றை அமைபபோம். இந்தக் கணம் முதல் விடுதலைப் பட்டாளத்தைத் திரட்டும வேலையில் இறங்குவோம. காளையார் கோவில் போய்விட்டதே என்று யாரும் கவலைப் படாதீர்கள். விரைவில் அதைக் கைப்பற்றுவோம்!

அனைவரும் பிரிந்து போங்கள்......பிரிவதற்கு முன்னால் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவிக் கொள்ளுங்கள். சுதந்திரம் பறிபோவதைக் கண்டு துடி துடிக்கும் இதயங்களை ஒன்றோடு ஒன்று ஒற்றியெடுத்துக் கொள்ளுங்கள். சுயமரியாதை நசுக்கப் படுவதைக் கண்டு தவியாய்த் தவிக்கும் உங்கள் தூய உள்ளங்கள் ஒன்றோடு ஒன்று பேசிக் கொள்ளட்டும்!

ஓடுங்கள்......மூலைக் கொருவராக. ஓடுங்கள்......ஆளுக் கொரு திசையில் ஓடுங்கள்...! நாம் மீண்டும் ஒன்று சேர்வ தானால் வெற்றிச் செய்தியை ஒருவர்க்கொருவர் சொல்லிக்

கொள்வோம்...தவறினால், விழுப்புண்பட்ட மார்போடு களத்தில் வீழ்ந்து மாள்வோம்!

சி. மருது :—விடுதலைப் பட்டாளத்தைத் திரட்டுவதற்கு இந்த நேரமே பிரிவோம். வெற்றிச் செய்தி...இல்லையேல் களத்தில் வீழ்ச்சி...! மானத்தோடு வாழ்வோம்......இல்லையேல் வீரத்தோடு வீழ்வோம்!!

(ஒருவர்க்கொருவர் தழுவிக் கொண்டு, கண்களில் செந்நீர் கசிய ஒருவரை ஒருவர் விட்டு பிரிய மனமில்லாது வெவ்வேறு திசைகளில் பிரிகின்றனர்.)

— திரை —

காட்சி 36

சிவகெங்கை

அரண்மனை.

(தொண்டைமானும் படமாத்தூர் உடையத்தேவரும் மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டிருக்கின்றனர். கறுத்தான் களையிழந்த முகத்தோடு இருக்கிறான்.)

தொண்டைமான் :—இன்றுதான் என் உள்ளம் குளிர்ந்தது. என் கல்யாணத்தாலும் கிடைக்காத இன்பம் காளையார் கோவில் வீழ்ச்சியால் கிடைத்தது. மருதுபாண்டியர் இறந்தார், என்ற சேதி கேட்டால் இன்னும் அதிகமாக மகிழ்ச்சியடைவேன்.

தேவர் :—இப்போது அவர்கள் சங்கராபதிக் காடுகளில் பதுங்கிக் கிடக்கிறார்களாம். அக்கியு துரைக்கு உளவு வந்திருக்கிறது.

தொண்டை :—கறுத்தான்...!

கறுத்தான் :—(சலிப்புடன்) சார்......!

தொண்டை :—முக்கியமான காடுகளைக் குறைந்த கவுலுக்கு விடு. மருது சேர்வைக்காரர்கள் காட்டில் உள்ள பாலைமரப் பொந்துகளில் பெட்டி பெட்டியாக பொன்னை ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்று கதை கட்டி விடு. கிடைக்கும் பொன் அவரவர்களுக்கே சொந்தம் என்று மக்கள் மனதிலே பேராசையை எழுப்பு. அவரவர்கள் இரண்டே நாட்களில் காட்டை வெட்டித் தீர்த்து விடுவார்கள். காடு அழிந்தது என்றால், அந்த

நல்நெஞ்சக்காரர்களும் ஒழிந்து விடுவார்கள். எல்லா புரளிகளை யும் நீயே மக்களிடையே மூட்டிவிடு, கறுத்தான்!

கறுத்தான் :—(வெறுப்போடு) அந்த நல்ல காரியத்தை நீங்களே செய்யுங்க, எசமான்!

தொண்டை :—(அதிர்ச்சி யுற்று) வாட்.....வாட்......?

கறுத்தான் :—அந்த ஓட்டை இங்கிலீசு எனக்குக்கூட கொஞ்சம் தெரியும். நிறுத்துங்க! இனிமே பறங்கியருக்கு உதவியா என்னால் இருக்க முடியாது.

தேவர் :—ஆங்...! எப்போதிருந்து இபபடி மாறிவிட்டாய்...?

கறுத்தான் :—என் உயிருக்கு உயிரான என் பெண்டாட்டி என்னை விட்டுட்டுப் போனதிலிருந்து.

(அவர்களை அருவருப்பாக நோக்கிவிட்டு வெளியேறுகிறான்.)

தொண்டை :—ஹூம்...நமக்குக் கூடத்தான் வெள்ளைக்காரனுக மேல் வெறுபபு இருக்கிறது. நாம் அதை வெளியில் காட்டிக் கொள்கிறோமா...அவன் ஒரு பைத்தியக்காரன்! தன் தலையில் தானே மண்ணைவாரிப் போட்டுக் கொள்கிறான்.

தேவர் :—அவன் கிடக்கிறான்! உங்களுக்கு ஒரு விசயம் தெரி யுமோ...மருது பயலுகளைப் பிடித்துத தருபவருக்கு நாலா யிரம் பொன் பரிசு கொடுக்கப்படும் என்று அக்னியு துரை அறிக்கை விட்டார், அல்லவா?

தொண்டை :—சிவகெங்கையான்களைப் பிடிச்சுக் கொடுத்துட்டு, அந்த நாலாயிரத்தையும் தானே தட்டிக்கொள்ள கர்னல் வெல்ஷ் இரவு பகலா வேலை செய்யறாராம். இது எனக்கு முதலிலேயே தெரியுமே......

தேவர் :—வேல்ஷ் துரைக்கும், மருதுபயலுக்கும் உடல் ஒட்டின சிநேகிதமாமே...பார்த்திங்களா...பணம் என்றதும் சிநேகித மெல்லாம் பறந்து போச்சு......

தொண்டை :—அது தானய்யா,...இன்றைக்கு இருக்கிற உலகம்...

— திரை —

காட்சி 37

காளையார் கோவில்

காடு.

(முத்தய்யன் மார்பில்பட்ட புண், புரை யோடி விட்டதால் நடக்க முடியாமல் தாங்க வொண்ணாத வேதனையோடு கீழே விழுந்து கிடக்கிறான். அந்த வழியாக சின்ன மருது வருகிறான்.)

முத்தய்யன் :—(வேதனையோடு) அம்மா...அம்மா...

சி. மருது :—(நின்று கவனித்து அருகில் வந்து) யார்...யார்... முத்தய்யனா...? முத்தய்ய...முத்தய்யா...!

முத்தய்யன் :—(பேச முடியாமல்) எசமான்...!

சி. மருது :—(வாரி, மடியில் கிடத்திக் கொண்டு) உனக்கு ஏனடா இந்த இழி நிலை...இழி செயல் புரிந்து வாழும் பழிகாரர்களெல் லாம்கூட இன்பமாக இருக்கிறார்களே...உண்மை விசுவாசம் கொண்ட உனக்காதோழா இந்த பரிதாப நிலை...

முத்தய்யன் :—மார்பில்பட்ட புண் புரையோடிப் போச்சிங்க, சாமி மூச்சுகூட சரியா விட முடியலே, எசமான் !

சி. மருது :—அய்யோ......உன்னைப் பார்க்கவே என்னால் முடிய வில்லையே...பாய்ந்து வரும் ஈட்டியைக்கூட அலுவசியமாகத் தடுத்துக் கொள்ள முடியும் என் இதயத்தால், உன்னைக்காணும் போது ஏற்படும் வேதனை வெள்ளத்தைத் தாங்க முடிய வில்லையேடா...

முத்தய்யன் :—ஒவ்வொரு கணமும் உங்களை கண்ணால பார்க்க மாட்டோமான்னு ஏக்க மடைந்து கிடைந்தேனுங்க...

சி. மருது :—இப்போது எப்படியிருக்கிறது, முத்தய்யா...!

முத்தய்யன் :—எசமான்...! நம்ம காளை...யார்...கோவில்...,

சி. மருது :—போய் விட்டதடா, அந்தப் பொக்கிஷம் !

முத்தய்யன் :—.....ஆ......!

(மூர்ச்சையாகி விடுகிறான்.)

சி. மருது :—(திடுக்கிட்டு) முத்தய்யா...! முத்தய்யா ..!

(சலக்கத்துடன் மூச்சு இருக்கிறதா என்று பார்த்து விட்டு, பின் திட சித்தம் அடைந்தவனாக எழுந்திருக்கிறான்.)

சி. மருது :—ஆயிரமாயிரம் இதயங்களில் வைத்துப்போற்றப்பட வேண்டிய உன்னை, நான் அனாதையைப் போல விட்டுவிட மாட்டேன், முத்தய்யா! கூடிய வரை உன்னைக் காப்பாற்ற முயற்சிக்கிறேன்.

(அவனைத் தூக்கி தோள் மேல் சாய்த்துக் கொண்டு நடக்கிறான்.)

— திரை —

காட்சி 38

காடு

(ஆடு மேய்க்கும் சிறுவர்களான குறுணியும குண்டனும் கையில் கஞ்சிக் கலயத்துடன இருக்கிறார்கள். அவர்களுடன் கண்ணம்மா......!

கண்ணம்மா :—உங்களை நம்பிதானே தம்பி நான் அந்த அண்ணனை விட்டிட்டுப் போனேன். இப்போது ஒண்ணுமே தெரியாதுன்னு சொல்றீங்களே...

குண்டன் :—அதுதான் சொல்றோமே, ஆச்சி! அவரு அன்னைக்கி ராத்திரியே யாரிடமும் சொல்லிக்காம போயிட்டாரு...அதுக்கப்புறம் தேடித்தேடி பார்க்கிறோம்...கண்ணிலே தென்படல...

கண்ணம்மா :—நானும் அலைஞ்சு அலைஞ்சு பார்க்கிறேன் .....அகப்படலையே...நேத்திலேருந்து சாப்பிடல ..பசி வேறே...இங்கேயிருந்து ரெண்டு கல் போனாதானே ஊர் இருக்குது.

குறுணி :—நாங்க இளைப்பு சாப்பாடு எடுத்து வந்தோம்...அதிலே மீதி கூழ் இருக்குது ..கொஞ்சம் குடிக்கறீங்களா...

குண்டன் :—கொஞ்சம் என்னடா கொஞ்சம்...அப்படியே கொடுத்திடலாம். இந்தாங்க ஆச்சி—

(கஞ்சிக் கலயத்தைக் கொடுக்கிறான்.)

கண்ணம்மா :—வேண்டாம் தம்பி வேண்டாம்...!

(எழுந்திருக்கிறாள்)

குண்டன் :—எங்க மேல ஆணை! நீங்க இதை வாங்கிட்டுத்தான் போகணும்...அந்தப் பக்கம் போனா தண்ணீர் இருக்கு...அங்கே போய் கூழை கரைச்சுக் குடிச்சுட்டு போங்க அமமா'

(விருப்பமில்லாது மட்கலயத்தை வாங்கிக் கொண்டு போகிறாள்.)

குறுணி:-ம்...நான் மத்தியாணம் கஞ்சி கொடுத்தா தான் ஆடு மேய்க்க போவேன்னு அழுதேன். எங்கபாட்டி பக்கத்து வீட்டிலே ஒரு செம்பு கூழ் வாங்கிவந்து கொடுத்திச்சு...அதையே நாம ரெண்டு பேரும் கிரவி குடிக்கலாமுன்னு பார்த்தா...

குண்டன் '—ஏலே, சவத்துப் பயலே! ஒருத்தருக்கு உதவி செஞ் சிட்டு சொல்லிக் காட்டாதேடா......

குறுணி :—சேச்சே! நீ என்னடா தப்பா நினைக்கறே...நான் ஒன் றும் சொல்லிக்காட்டலே...ஊரு உலகம் இருக்கிற இருப்பை சொன்னேன். ஆமா...அது போவட்டும்...! நம்ம மருது ராசாவுக கதை என்னு ஆச்சு...

குண்டன் :—சொல்கிறேன்...எழுந்து வா! ஆடுக தொலை தூரம் போயிருச்சு...பேசிகிட்டே போவலாம்.

(புல்லாங்குழலை இனிமையுடன் ஊதி இசைத்துக் கொண்டே செல்கிறான்; குறுணி அவனைப் பின் தொடருகிறான்)

— திரை —

(தொடரும்)

(63-ஆம் பக்கத் தொடர்ச்சி)

றில் தென்னாட்டுக்கு முக்கிய இடம் உண்டு. தென்னாட்டு மொழி, கலை, இலக்கியம் முதலிய வற்றை அறிவதில் வெளி நாட் டினரின் ஆர்வம் பெருகிவரு கிறது. தென்னாட்டு மொழி, இலககியம் பற்றிப் பிரிட்டிஷார் எழுதும் நூல்களை வரவேற்கும் நாளும், பிரிட்டனிலுள்ள சுவடி களை ஆராயத் தென்னாட்டுப் புலவர்கள் பிரிட்டனுக்குப் பிர யாணம் செய்யும் நாளும் தொலை வில் இல்லை. பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்கள் பலவற்றிலும் கீழ்த் திசைக் கலை நூல் நிலையங்களிலும் திராவிட மொழி, இலக்கிய நூல் கள் இருக்கின்றன. அவற்றைப் பரிசோதிக்கத் தென்னாட்டு மொழியாராய்ச்சியாளர் பிரிட்ட னுக்குப் பிரயாணம் செய்வது அவசியம்.

" மஞ்சரி

புற்று நோய்

புற்றுநோய் என்ன வகையான நோய்? அது ஒரு வித புண் கட்டி அல்லது சதை வளர்ச்சி நோய். அது உடம்பின் எந்தப் பாகத்திலும், எந்த வயதிலும் உண்டாகலாம் என்றாலும், பெரும்பாலும் முப்பதைந்து வயதிற்கு மேலேயே உண்டாகும்.

2. புற்றுக் கட்டி பார்ப்பதற்கு எப்படி இருக்கும்?

சாதாரண கட்டிகளைப் போலத் தோன்றலாம். ஆயினும் இடத்திற்குத் தகுந்தவாறு வேறுபடும். உதாரணமாக, மார்பில் கிளம்பும் கட்டி ஒரு வெள்ளை ரப்பரைப் போலவும் கடினமாகவும் இருக்கும். இரைப்பையிலும் குடலிலும் உண்டாவதோ சிவப்பாகவும், மென்மையாகவும், எளிதில் சிதைந்துவிடக் கூடியதாகவும், இரத்தக் கசிவு உள்ளதாகவும் இருக்கலாம்.

3. இந்த நோயின் காரணம் என்ன?

இன்னும் உறுதியாகத் தெரியவில்லை. ஏதாவது ஒரு வேற்றுப் பொருள் உடலில நெடுநாளாக உராய்ந்துகொண்டிருப்பதே காரணம் என்று பெரும்பாலான ஆராய்ச்சியாளர் கருதுகிறார்கள். வேறு சிலர், சில உயிரணுக்கள் போதிய அளவு பிராணவாயு கிடையாமல் சீர் அழிந்து போவது காரணமாக இருக்கலாம் என்று ஊகிக்கிறார்கள். இன்னும் சிலர் வைரஸ் என்கிறார்கள். ஓர் உருப்பெருக்கிக் கண்ணாடியால் ஒரு கட்டியைப் பார்த்தால், அதிலே பெரும் திரளான உயிரணுக்கள் கட்டு மீறி, தாறுமாறாக நடந்துகொள்வது தெரியும். இந்தக் குழப்பத்தின் காரணத்தை விஞ்ஞானிகள் விரைவில் கண்டுபிடித்துவிடுவார்கள் என்று நம்புவோம். ஆனால் இப்பொழுதே ஓர் உண்மை ஐயமறத் தெரியும். அது என்ன என்றால், தகுந்த மருத்துவம் செய்துகொள்ளாவிட்டால், இந்த நோய் உயிரைப் பறித்துவிடும் என்பதே.

4. இது ஒரு சாதாரண வியாதியா?

ஆம். ஆண்டு தோறும் உலக முழுவதும் ஏறத்தாழ இருபது லட்சம் மக்கள் இதனால் உயிர் துறக்கின்றனர். இவர்களில் பாதிப்பேர் பிழைத்துக் கொள்ளலாம். துவக்கத்திலேயே ஏற்ற சிகிச்சை செய்துகொள்வார்களானால். பலருக்கு நோய் இருப்பது கூடத் தெரியாது. ஆண்டில் ஒன்று அல்லது இரண்டு தடவை டாக்டரிடம் உடம்பைச் சோதித்துக் கொள்ளவேண்டும் என்று கூறு

வதற்குக் காரணம் இதுவே. சோதனையில், நோயின் அறிகுறிகள் புலப்பட்டால். உடனே பரிகாரம் தேடிக்கொள்ளலாம், அல்லவா?

5. இந்த நோய் பெரும்பாலும் பெண்களுக்குத்தான் உண்டாகுமா?

அன்று. ஆடவருக்கும் உண்டாகும். பெண்களுக்கு மர்ம உறுப்புகளில் மிகுதியாகக் காணும்; ஆண்களுக்கோ நுரையீரல், இரைப்பை, ஆசனவாய், தோல் ஆகிய இடங்களில் அதிகம்.

6. குழந்தைகளுக்கும் இது வருமா?

வரும். ஆனால் குழந்தைகளுக்ும் இளைஞர்களுக்கும் சாதாரணமாக இரத்தப் புற்றே உண்டாகும்; விசேஷமாக, லியூக்கிமீயா என்றவகை.

7. இந்த நோய் பெற்றோரிடமிருந்து பிள்ளைகளுக்குத் தொடர்ச்சியாய் வரக்கூடியதா?

அப்படிச் சொல்வதற்கு அத்தாட்சி இல்லை. ஆனால் அது உண்டாவதற்குத் துணையாக இருக்கக்கூடிய சில இயல்புகள் தலைமுறைத் தொடர்பாக வரலாம். தாய் தந்தையரில் ஒருவருக்கு இந்த நோய இருந்தால், பிள்ளைகள் மிகவும ஜாக்கிரதையாக இருப்பது அவசியம்.

8. இது தொற்று நோயா?

இது தொற்றக் கூடியது என்று சொல்வதற்கு இன்றளவும் சான்று இல்லை.

9. எல்லா விதக் கட்டிகளும் புற்றாக மாறக் கூடுமா?

பெரும்பாலும் மாறுவதில்லை. ஆயினும் ஒரு கட்டி அல்லது தடிப்பு குணம் அடையாமல் நீடித்து இருந்தால், ஒரு டாக்டரிடம் அதைக் காட்டி, சோதித்துக்கொள்ள வேண்டும். மேலும் காலம் தாழ்த்துவது கனமோசம்.

10. சாதாரணமாக எந்த இடங்களில் புற்று உண்டாகும்?

தோலிலும், சளிச் சவ்வுகளிலும், உட்புற உறுப்புகளிலும் உண்டாகும் சிலருக்குத் தோலில் கறுப்பு மச்சங்களாவது வெண் பள்ளிகளாவது இருக்கும். வாய், தொண்டை, பிறப்பு உறுப்பு ஆகியவற்றின் சளிச் சவ்வுகளிலும் வெண்ணிறப் புள்ளிகள் இருக்கலாம். அல்லது வேறு விதமான நிற மாறுபாடுகள் இருக்கும். வாயில் பல் வெட்டி, அல்லது பொய்ப் பற்கள் சரியாகப் பொருந்தாமல், புண் உண்டாகியிருக்கலாம். இவைகளில் ஒன்று திடீரென்று பரவத் தொடங்கினால், அதை உடனே கவனிக்க வேண்டும். வேறு காலத்தில் ஏற்படும் காயங்களைக் கவனமாய்ப் பார்க்காது போனால். அவைகளும் புற்றாகலாம். சில பெண்களுக்குக் கருப்பையின் கழுத்தில் புற்று வைத்திருப்பதற்கு இதுவே காரணம். இரண்டு வாரங்களில் ஆறாத

எந்தப் புண்ணையும் அலட்சியம் செய்யாமல், டாக்டரிடம் காட்ட வேண்டும்.

11. கழுத்தில் ஒரு வீக்கம் உண்டானால், அது தானாகத் தணிந்துவிடும் என்று காத்திருப்பது சரியா? அது அபாயம். எவ்வளவு சீக்கிரம் சிகிச்சையைத் தொடங்குகிறோமோ, அவ்வளவு நல்லது.

12. இந்த நோயின் குறிகள் எவை?

ஏழு குறிகள் உள்ளன. அவைகளில் யாதேனும் ஒன்று தோன்றினால், அது ஆபத்தைக் காட்டும் குறி என்று அறிந்து, நாள் கடத்தாது, உத்தம வைத்தியர்களிடம் காட்டி, தகுந்த பரிகாரம் செய்துகொள்ள வேண்டும்.

(அ) ஆறாத புண்.

(ஆ) மார்பிலாவது வேறு இடத்திலாவது குணப்படாது இருக்கும் கட்டி.

(இ) உடல் துவாரத்தில் இரத்தமாகிலும் நீராகிலும் பொசிதல்.

(ஈ) மச்சம் நிற மாறுதல் அல்லது பரவுதல்.

(உ) நீண்ட அஜீரணம், விழுங்க முடியாமை.

(ஊ) குரல் கம்முதல், தீராத இருமல்.

(எ) புதிய மலச்சிக்கல்.

13. இந்த நோயில் வலி இராதா?

பெரும்பாலும் துவக்கத்தில் இராது. ஒரு மனிதனுக்கு இரைப்பையில் ஒரு பெரிய கட்டி இருக்கலாம். ஆனால் அசனால் உணவு நன்கு செரியாத தொந்தரவு ஒன்றே ஏற்படுமே தவிர, வலி காணாது. கட்டி முதிர்ந்த பின் வலிக்கலாம்.

14. டாக்டர்கள் இந்த நோயை எவ்வாறு நிதானம் செய்கிறார்கள்?

தோல் புற்றைக் கண்டறிவது கடினம் அல்ல. உள் உறுப்புகளில் இருந்தால் தான் சிரமப்படும். முதலில் உடல் முழுவதையும் தக்க கருவிகளால் சோதிப்பார்கள். அப்புறம் அநேகமாக உட்புற அவையங்களை எக்ஸ்-ரே படம் பிடிப்பார்கள். ஒரு புண் புற்றாக இருக்கலாம் என்ற ஐயம் ஏற்பட்டால், அதிலே ஒரு சிறு துண்டு வெட்டி எடுத்துப் பரிசோதித்து, நிச்சயம் பண்ணுவார்கள்.

15. இதற்கு என்ன சிகிச்சை?

மூன்றுவிதமான சிகிச்சை முறைகள் இன்று உள்ளன; அறுவை மருத்துவம், எக்ஸ்-ரே சிகிச்சை, ரேடியம் சிகிச்சை.

16. இந்த நோய்க்கு ஒரு முறை மருத்துவம் செய்து கொண்ட பிறகு, அது திரும்பவும் தோன்றுமா?

தோன்றலாம். ஐந்து ஆண்டு வரை மீண்டும் வராவிட்டால் தான், பிணி குணமாகிவிட்டது என்று நம்பலாம்.

17. இந்த நோய் வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும்?

(அ) உடம்பில் எந்த விதமான உராய்வும் அழற்சியும் நீடித்து இராதவாறு கவனித்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) ஆண்டுதோறும் ஒரு டாக்டரிடம் உடம்பைச் சோதித்துக் கொள்ள வேண்டும்.

(இ) ஐயப்பாடு உள்ள கட்டிகளுக்கு வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

(ஈ) வாயையும் பற்களையும் நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

(உ) புகை பிடிக்கக் கூடாது.

(ஊ) இருமல் நீடித்து இருந்தால், அதைக் கவனிக்க வேண்டும்.

(எ) இறுக்கமாக ஆடை அணியலாகாது.

(ஏ) தோலைத் துப்புரவாக வைத்துக்கொள்ள வேண்டும்.

உடம்பில் தோன்றும் எந்த மச்சத்தையாகிலும் புண்ணையாகிலும் கட்டியையாகிலும் சொற்பமாகக் கருதலாகாது. அவை புற்றாகப் பரிணமிக்கலாம். அறிவாளிகள் அவற்றை முளையிலேயே சிகிச்சையால் நிவர்த்திக்கொள்வார்கள்.

"நல்வழி"

(64-ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவி செய்ய முடியும்? என்று கேட்டார்.

உண்மைகளை அப்படியேகூறும் பத்திரிகைகள், மக்களின் அறிவின்மையை அகற்றும் பத்திரிகைகள்தான் தேவை. செய்திகளை பிரமாதப்படுத்தி திரித்து, விருப்பம்போல் வளைத்துப் போடுவது விரும்பத்தக்கதல்ல என்று கூறினார்.

சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் கொள்கைகளையும் விமரிசித்து விளக்குவது பத்திரிகைகளின் மற்றொரு முக்கிய பணியாகும். ஜனநாயக அமைப்பில் நல்ல விமர்சனங்கள் மாற்றுக் கருத்துக்கள் கண்டனங்கள் முதலியவற்றை சகித்துக் கொண்டு போவது அவசியம். இன்னும் சொல்லப்போனால் அவைகளுக்கு ஊக்கமளிக்கவேண்டும். இந்த வகையில் இந்தியப் பத்திரிகைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவது சிறப்புமிக்கதொரு தன்மையாகுமென்றார்.

இந்தியாவில் ஜனநாயகம் வெற்றி பெற்றுள்ளது. இதை வெளி நாட்டார் பெரிதும் பாராட்டியுள்ளனர். இந்த வெற்றியில் பத்திரிகைகளுக்கும் பெரும் பங்குண்டு. —நவ இந்தியா

"வெண்ணிலா"வின் பவனி
ஒரு தித்திக்கும் நிகழ்ச்சி!

செங்கை மாவட்டம், மதுராந்தகம் வட்டத்தைச் சேர்ந்த கொங்கரை மாம்பட்டுக் கிராமத்தில் இருக்கும் கழக ஆரம்பப் பள்ளியில் முப்பத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. முதலில் ஆண்டுவிழாவைப் பற்றியே அக்கறைப் படவில்லை, கிராமத்தினர்! ஆனால், விழா நடந்த பிறகு மனம் பூரித்தனர்; புளகாங்கித மடைந்தனர்!

கடந்த 12-5-59 ஆண்டு இரவு 8-30 மணிக்கு பள்ளி ஆய்வர் திரு. ப, கனகசபை அவர்கள் தலைமையில், திருமதி ஆர். பத்மாவதி அவர்கள் தமிழ்த்தாய் வணக்கம் பாடப் பொதுக்கூட்டம் துவங்கியது.

தலைவர், "கிராமத்தில் உள்ள ஒவ்வொருவரும் பள்ளிக்காக வேண்டிய உதவிகளைச் செய்து ஊரில் கல்லாதவர்களே இல்லாத எழுச்சிமிக்கதோர் சமுதாயத்தை உருவாக்க வேண்டும்" என்று தெள்ளு தமிழில் சொற்பெருக்காற்றினர்.

வட்ட இளர்துணை ஆய்வர் திரு. ச. தியாகராசன் அவர்கள் தமது சொற்பொழிவில், 'பள்ளிக்கூடம் ஓர் கலைக்கூடம் கோயிலுக்காக மக்கள் அக்கறை எடுத்துக் கொள்வதைப் போலவே, பள்ளிக்கூடத்தின் பக்கமும் தங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இரவு 10 மணிக்குப பள்ளிச் சிறுர்களால் திரு. தாமரைக் கண்ணன் அவர்கள் தீட்டிய "ஆரம்பக் கல்வி" இதழில் வெளி வந்து பல்லாயிரம் மக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட "வெண்ணிலா" என்ற தீஞ்சுவை நாடகம சிறப்புடன் நடித்துக் காட்டப்பட்டது. நாடகத்தைக் கண்ட இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்தனர்.

நாடகத்தின் அமைப்பு முறையைப் பற்றியும், பயிற்சியைப் பற்றியும் தலைவர் பாராட்டிப் புகழ்ந்தார்!

ஆண்டுவிழாவில் கலந்துகொண்ட கிராமப் பிரமுகர் திரு. அப்பாவு ரெட்டியார் அவர்கள் பள்ளிக் கட்டடம் கட்டுவதற்காக ரூ 2000 நன்கொடை யளிப்பதாக வாக்குறுதி அளித்தார்.

சூழ்ந்திருந்த இன்னல்களைப் பொருட்படுத்தாது, ஆசிரியர்கள் இருவரும் இடையறாது எடுத்துக்கொண்ட முயற்சி பள்ளியின் ஆக்கத்திற்கு இரண்டாயிரம் ரூபாயாகப் பயன்பட்டது.

தலைமை யாசிரியர் கே. கமலநாதன் நன்றி கூற, இரவு 12-35-க்கு விழா இனிது முடிந்தது.

ஒவ்வோர் குடும்ப வாழ்க்கைக்கும் வேண்டிய அனுபவ நூல்கள்

(அறநெறி ஞானபானு, தமிழ்ப் புலவர் சிவ. முருகசிவம் அவர்களால் இயற்றப்பட்டவை)

1. உணவு நெறி

மக்கள் நாளுக்குநாள் பிணியும் துப்பலமும் அடைந்து வருவதால் அவைகளினின்று விடுபட்டு தேகபலமும் மனோசக்தியும் ஆத்மலாபமும் பெறவேண்டித் உணவு வகையிலேயே நோயணுகாத வண்ணம் விஞ்ஞான முறையுடன் தினப்படி சாப்பிடும் ஆகாரத்தில் துப்பலம் நீங்கிக், வீரிய விருத்தியும் தேக பலமும் உண்டாக குறைந்த செலவில் நிறைந்த பலன் தரும் பதார்த்த வகைகளின் குணங்களும், சில முக்கிய வைத்திய முறைகளும், ஒவ்வோர் நாளைக்கும் ஆராய்ந்து அனுபவத்தில் வந்தவற்றை இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. இஃது உடற்குறுதி பயக்கும் நூல் விலை 0—8—0

2. சித்தர் நெறி

ஞான நெறி நின்று யோகத்தில் இறைநிலையை உணர மிக லேசான பிராணாயாமம், மனமடங்க உபாயம் தினம் வாழ்க்கைக்குப் பயன்தரும் சாதகமோடு பழகும் முறை காரியம் வெற்றிபெறும் குறிப்புகள், சித்தர்கள் கூறும் அனுபவ முறை, முதலியன எல்லா மக்களும் எளிதில் உணருமாறு லேசான முறையில் எழுதப்பட்டுள்ளது. மேலும் யோகநூல் சரநூல் திருமந்திரம், சித்தர் நூல் முதலியவற்றின் கருத்துக்களும் கொண்ட அனுபவத்தில் வந்த நூல் இஃது உயிர்க் குறுதி பயக்கும் நூல். இதன் விலை ரூ. 0—8—0

3. ஓது நெறி

இக்காலத்து ஆசிரியர்களும் மாணவர்களும் அறிவுத்துறையில் ஈடுபடும் மக்களும் நாளுக்குநாள் பலமும் உடல் வளர்ச்சியும் ஞாபக சக்தியும் குறைந்து கொண்டே வருவது யாவரும் அறிந்த விஷயம். படித்த செய்யுட்களையும் உணர்ந்த கருத்துக்களையும் உடனே மறக்கும் மறதியையும், அயர்ச்சி, தூக்கம் குறைவு, தலைவலி, மயக்கம், முதலியவற்றைப் போக்கிக் கொள்ளவும், ஞாபகசக்தி வளர வேண்டுமானால் உடற்பலம், மனோபலம், மூளையின் பலம் நன்றாக இருக்க வேண்டியிருப்பதால் அதற்குப் படிக்கும் காலம் தூங்கும் நேரம், உண்ணும் உணவு, குளிக்கும் நாட்கள் தேகப் பயிற்சி பொருந்திய ஆசனம், வேண்டிய விளக்கு, படிக்கும் உஷ்ணத்தினால் உண்டாகும்

மலபந்தத்தைப் போக்க மருந்து, மூளைக்குப் பலம் செய்யும் கிருதம், சிர ரோகங்களை நீக்கும் தயில முறை ஆகியவற்றை இந்நூலில் எழுதப்பட்டுள்ளது. இதன் விலை அணா. 0—8—0

4. வாழ்க்கை நெறி

இந்நூலில் பிறப்பின் அருமை, வாழ்க்கையின் வகை, பெண் பார்க்கும் முறை, கற்பு முறை, மக்களைப் பெறும் விதம், மக்களை வளர்க்கும் முறை, பேணுதல், படிப்பித்தல், பேசுவித்தல், புலமை பெறச் செய்தல், துயிலும வகை, குளிக்கும் விதம், உடுக்கும முறை, சமைக்கும் விதம், உண்ணும் முறை, புகழ்பெறும் வழி, நல்லோர் நேசம், தியானம், முக்தி வரையில 25 நெறிகளாக யாவரும சுலபமாக தெரிந்து நடந்துகொள்ளக்கூடிய முறையில் பல நீதி கருத்துக்களும் உண்மைத் தத்துவங்களும் அடங்கியது. இதன் விலை ரூ. 1—0—0

குறிப்பு:—இந் நூல்கள் ஜாதிமத கொள்கை வேற்றுமையின்றி எல்லோருக்கும் வாழ்க்கைக்குப் பயன் தருபவை. ஒவ்வோர் குடும்பத்தினருக்கும மிக அவசியமான நூல்கள்.

வேண்டுவோர் புத்தகத்தின் கிரயத்தை மணியாடர் மூலம்
பின் கண்ட முகவரிக்கு அனுப்பினால் தபால் செலவு
இலவசமாக அனுப்பப்படும்.

இங்ஙனம்,

ஆசிரியர் மு. சிவகுருநாதன்

அறநெறி அச்சகம்,
14, ஜீஸ்ஸ் தெரு மண்ணடி சென்னை-1.

உதிர்ந்த மலர்கள்

எந்த நாட்டிலே கவிதைக்குத் தடை போட்டு விட்டார்களா, அப்படியானால் அந்த நாட்டின் வளர்ச்சிக்கே தடை போட்டு விட்டார்கள் என்றுதான் பொருள்.

—வில்லியம்பிளேக்

மரணம் என்பது ஒரு கடன். அந்தக் கடனை எல்லோருமே கொடுத்துத்தான் தீரவேண்டும். பிறகோர் நாள் தருகிறேன். என்றோ, முடியாது ஆகாது என்றோ பேசிட இயலாது.

—ஷெரிடன்.

நாம் பிறக்கும்போது, நம்மைச் சூழ உள்ளவர்களெல்லாம் சிரித்து மகிழ நாக் அழுதுகொண்டே பிறக்கிறோம். இறக்கும் போது கதை வேறாக இருக்கட்டும் நம்மைச் சூழ உள்ளவர்களெல்லாம் அழ அழ நாம் சிரித்துக்கொண்டே இறப்போமாக.

—வில்லியம் ஜோன்ஸ்

விரைவாகப் படித்தல்

விரைவாக ஆனால் தெளிவாகப் படித்தல் என்பது ஒரு சிறந்த கலையாகும். படித்தல் என்று கூறும்போது வாய்விட்டுப் படித்தல் என்பதை மட்டுமே இங்குக் குறிப்பிடவில்லை; படித்தறிதல் என்பதையும் உள்ளடக்கித்தான் குறிப்பிடுகிறோம்.

விரைவாகவும் தெளிவாகவும் படித்து அறிந்து கொள்ளுதலில், முழுக்கவனம் செலுத்தாதவர்கள், வாழ்க்கையில் மேலோங்கிச் செல்பவர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்ள முடிவதில்லை. எங்கும் தோல்வியே அத்தகையோர்க்கு எதிர்ப்பட்டு நிற்கும்.

ஆட்சித்துறையானாலும், ஆணை செலுத்தும் பதவியானாலும், அலுவலகப் பணியானாலும், ஆசிரியர் வேலையானாலும், விளம்பரத் தூதுவரானாலும், வியாபாரத் தரகரானாலும் படித்தறிந்துகொள்ளும் பண்பு மிகமிக வேண்டற்பாலதாகும் இற்றை நாளில்.

சமுதாய வளர்ச்சியில் அக்கறை கொண்ட அமெரிக்க அறிஞர்கள், உயர்நிலைப்பள்ளிவரை படித்து முடித்துவிட்டு சாதாரண வேலைகளில் அமர்ந்திருக்கும் இளைஞர்களில் சுமார் 2000 பேரைப் பொறுக்கி அவர்களுடைய அறிவு ஆற்றல், திறன் ஆகியவைபற்றி ஆராய்ச்சி செய்தார்களாம். அவர்கள் எல்லோரும் போதுமான அளவு அறிவும், படிப்பும் பெற்றவர்களாக இருந்தும், அவர்கள் உயர்வான நிலைமைகளுக்குப் போக முடியாமல் தாழ்ந்த அலுவல்களில் படிந்திருப்பதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து பார்த்தார்களாம். அவர்களில் சுமார் நூற்றுக்குப் பத்துப் பேர்களைத் தவிர மற்றவர்கள் அனைவரும் தெளிவாகப் படித்தறிபவர்களாகவோ ஆழ்ந்த கவனம் செலுத்துபவர்களாகவோ காணப்படவில்லை. நன்றாகப் படித்தறிந்து கொள்ள முடியாத குறையே, அவர்கள் மேம்பாடு எய்துவதற்கான வாய்ப்புகளை அளிக்கவில்லை என்ற முடிவுக்கு அந்த அறிஞர்கள் வந்துள்ளார்கள்.

தெளிவாகப் படித்து அறிந்து கொள்ள முடியாத பண்பினாலே ஏற்படும் குறைகள்பற்றி அறிஞர்கள் வெளியிட்ட அறிக்கையைக் கண்ட, ஹார்வார்டு பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள், விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் ஆகியோர் "விரைவாக படித்தல்" (Read faster) என்ற குழு ஒன்றை அமைத்துக்கொண்டு பயிற்சி பெறத் தொடங்கியுள்ளார்கள். அமெரிக்க அரசாங்கம், தன் பொது அலுவலகத்தில் வேலை பார்க்கும் சில ஆணையாளர்

களைப் பொறுக்கி எடுத்து, 'விரைவாகப் படிக்கும்' பயிற்சி வகுப்புகளுக்கு அனுப்பி வைத்தது.

"படித்தல் முழு மனிதனை உருவாக்குகிறது." (Reading maketh a full man) என்பது பேக்கன் என்ற ஆங்கில அறிஞர் கூறிய பொன் மொழி. "கலையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும், அவையில் லவே கள் மரங்கள்—சபைநடுவே, நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதான் நன்மரமாவான்" என்பது பழம்பாடல். விரைவாகப் படித்தறிதல் சிறந்த திறமையின் அறிகுறியாக ஆகிவிட்டது.

உலகம் மிக விரைந்து சென்று கொண்டிருக்கிறது. படிக்க வேண்டிய புத்தகங்களும், செய்தித்தாள்களும், கருத்திதழ்களும, ஆயிரக் கணக்கில், இலட்சக் கணக்கில் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. அலுவலங்களில் அன்றாடம் பார்த்து முடிவு செய்ய வேண்டிய செயல்கள் ஆயிரக்கணக்கான பக்கங்களில் விரிந்து கிடக்கின்றன. விரைவாகப் படித்தறியும் பழக்கத்தையும், பண்பையும் பெற்றாலல்லது ஒவ்வொருவனும் இன்றைய உலகில் தன் கடமையைச் செவ்வனே செய்து முடிக்க இயலாது.

இவற்றை நாட்களில் ஆட்சிப் பீடம் ஏறியிருக்கும் அமைச்சர் போன்றோர்கள், தம்மிடம்வந்து சேரும் குற்றம்—குறை விண்ணப்பங்களையும், காம வெளியிடப் போகும் கட்டளைகளையும் தெளிவாகவும் விரைவாகவும் படித்தறிந்து கொள்ளும் பழக்கம் கொண்டிருந்தால்மட்டுமே திறமையான ஆட்சியை நடத்த இயலுகிறது என்பது கண்கூடு.

விரைவாகப் படித்தறிதல் என்பது பழக்கப் பயிற்சியின் காரணமாகப் பற்றித்தான் "செந்தமிழும் நாப் பழக்கம்" என்று கூறினார் ஔவையாரும்.

மெதுவாகப் படித்தலுக்குச், சிறுபிள்ளை பருவத்தில் ஏற்படும் பார்வைக்கோளாறும், கேள்விக் கோளாறும் காரணங்களாகக் கூடும். தைராய்டு கிளாண்டு (Thyroid gland) என்ற தொண்டைக்குழி உறுப்பு ஒன்று கோளாறு அடைவதன் காரணமாகவும் ஒருவன் படிக்க முடியாமற் போய்விடக்கூடும்.

சிறு பிள்ளைகளாக இருக்கும் போது வீட்டில் மற்றவர்களோடு ஏற்படும் தகராறு காரணமாகவும், மற்றவர்களோடு கலந்து வாழக் கற்றுக்கொள்ள முடியாத தன்மை காரணமாகவும், மகிழ்ச்சியற்ற குடும்ப வாழ்க்கையின் இடையிலே வாழ்வதன் காரணமாகவும், உடன் பிறந்தார்களோடு சண்டையிட்டுக்கொண்டு எப்பொழுதும் படிக்க உட்காருவதன் காரணமாகவும் விரைவாகப் படிக்கும் பழக்கத்தைச் சிலர் பெற்று விடுகிறார்கள். இது வேண்டாத சூழ்நிலையில் உருவாகிறது என்று

னும். இளம் பருவத்தில் ஏற்படும் மெய்ப்பாட்டுணர்ச்சி (Psychology) யின் விளைவாகும்.

எழுத்துக் கூட்டியோ தட்டுத் தடுமாறியோ, விட்டுவிட்டோ: நிறுத்தி நிறுத்தியோ படிக்கும் பழக்கமுடைய வயதுவந்தோர் முயன்றால் தம்முடைய குறைபாடுகளைப் பெருமளவுக்குப் போக்கிக் கொள்ளலாம்.

ஒரு செகண்டின் (ஒரு நொடி) ஒரு பகுதி நேரத்தில் கண்ணானது மூன்று அல்லது நான்கு சொற்களைக் கவனிக்க முடிகிறது. ஒரு சொல்லுக்கும் இன்னொரு சொல்லுக்கும் இடையில் சிறிது நேரம் நிறுத்திப் பிறகு அடுத்த சொல்லைபிடித்து,மீண்டும்நிறுத்தி இப்படியாக வாக்கியம் முடியும் வரையில் செல்லும், மண்புழு நகருவதுபோன்ற பழக்கத்தை வழக்கத்தில் கொண்டுவந்து விட்டவர்கள் நீண்ட நேரத்தை வீணாக்க வேண்டியவராகிறார்கள். சீரான முறையில், வரிக்கு வரி, கண்ணினால் தாவும் பழக்கத்தைக் கொண்டு வந்தாலொழிய, இக்குறைபாடு நீங்காது.

மெல்லப்படிக்கும் குறைபாட்டைப் போக்க அமெரிக்காவில், கருவி ஒன்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அது கண்ணை ஓரிடத்திலே மட்டும் ஆழ்ந்து கவனிக்கச் செய்யும். கண்ணானது படித்த சொற்களையே படிக்க படிக்கத் திரும்பாதபடி, அந்த கருவி கண்ணைத் தடுத்துக் கொள்வதால், பெரும்பாலான நேரம் சேமிக்கப்படுகிறது.

நேரம் வீணாகாமல் பாதுகாக்க, கண்ணை முதலில் ஒருவரியின் நடுப்பகுதியில் பொருத்தி வைத்துக் கொண்டு, வரியின் இரண்டு பக்கத்தையும் சம அளவில் பார்த்துக்கொள்ளும்படியான பழக்கத்தைக் கொண்டு வரவேண்டும். கண்ணை சொற்களோடே அழைத்துக் கொண்டு போவதால் அதிகமாக வீணாக்கப்படும் நேரம், கண்ணை நடுவே நிறுத்தி வைத்துக் கொள்வதால் காக்கப்படுகிறது.

பொதுவாக பார்த்தால் நடைமுறையில் நன்றாகப் படிக்கும் ஆற்றல் பெற்றவர் நிமிடம் ஒன்றுக்கு 350 சொற்களைப் படிக்க இயலும். நல்லசுருக்கெழுத்தாளர்கள் ஒருநிமிடத்தில் 180 லிருந்து 200 வரை சொற்களைக் குறிப்பெடுத்துக்கொள்ள முடிகிறது,

அமெரிக்காவில் பயிற்சியின் காரணமாக பாங்குகளின் அலுவலாளர் குழு ஒன்றில் இணைந்திருப்பவர்கள், நிமிடத்திற்கு 275 சொற்கள் படிக்கத் தெரிந்தவர்கள் 450 சொற்கள் படிக்கக் கற்றுக் கொண்டார்கள். அது போலவே அரசாங்க அலுவலாளர்கள் சிலர் நிமிடத்திற்கு 292 சொற்களிலிருந்து 488 சொற்கள்வரை பேசக் கற்றுக்கொண்டார்களாம்.

விரைவாகப் படிப்பதற்குக், கண் பார்வையோடு மனவுணர்ச்சி

(அடுத்த பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பெறுவது தண்ணீர்! தருவதோ இளநீர்!

[முருகு சுப்பிரமணியன்]

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தென்னை மரத்தை நீங்கள் எல்லோருமேபார்த்திருப்பீர்கள். பட்டணங்களிலுள்ள பிள்ளைகள் கூடக் கண்டிப்பாகத் தென்னையைக் கவனித்திருப்பார்கள். தென்னைமரம் என்று சொன்னவுடன் உங்களுக்கு முதலில் எது நினைவுக்கு வருகிறது? அதன் உயரந்தான் உங்கள் உள்ளத்தில் பதிந்திருக்கும். 'தென்னைமரம் போல் வளர்ந்திருக்கிறான்' என்று ஆறடி உயரமுள்ளவர்களைக் குறிப்பிடுவது தமிழ் மரபு.

தென்னைமரம் தேங்காய் தருகிற மரம். தேங்காய்த் துருவல் சேர்க்காமல் நம் தாய்மார்கள் சமையல் செய்வது அரிது. தேங்காயை உடைத்து வைத்து இறைவனை வழிபடுவர் இந்து மதத்தினர். கடவுளுக்கு உகந்தது தேங்காய் என்பது நம் பிக்கை. தேங்காயைப் பற்றி இன்னும் எவ்வளவோ சொல்லலாம்.

ஒரு பென்சிலும் தாளும் எடுத்துக்கொண்டு தேங்காயின் பயன்களை வரிசையாக எழுதுங்கள், எத்தனையோ பக்கங்கள் எழுதவேண்டியிருக்கும்.

தேங்காயைச்சொல்லும்போது இளநீர் உங்கள் உள்ளத்தில் ஊசலாடும். கொளுத்தும் உச்சி வெயிலில் இரண்டு இளநீர் வெட்டித்தரச் சொல்லிக் குடித்தால் எவ்வளவு இன்பமாயிருக்கும்! மலாயாவில் இளநீர் விற்கிறவர்கள் சீனி போட்டுக் கலக்கித் தருகிறார்கள். பள்ளிக் குழந்தைகளுக்கு இளநீரும் கரும்புச் சாறும் மிக எளிதில்கிடைப்பவை. இளநீர் இயற்கையிலேயே இனிப்பான பானம். மலாயாவில் இளநீர் அவ்வளவு இனிப்பாக இல்லாததாலேயே அதில் சர்க்கரையைப் போட்டுச் சாப்பிடவேண்டியிருக்

(முன் பக்கத் தொடர்ச்சி)

யும் தேவைப்படுவதாகும். இரண்டும் பயிற்சியின் காரணமாகப் போதுமான அளவு இணைந்தனவாக ஆகிவிட வேண்டும். அச்சம், அதிர்ச்சி, தாழ்வு மனப்பான்மை, பேரொளிகளைக் காண்டல் ஆகியவை காரணமாகக் கண் பார்வை கெட்டு விடக் கூடும் கண் பார்வை கெடாமலும் மனம் சோர்வடையாமலும் பார்த்துக் கொண்டால், பேக்கன் கூறியது போல் ஒருவர் தம்மை 'முழு மனிதன்' ஆக்கிக்கொள்வதற்கான எல்லா வாய்ப்புகளையும் எளிதில் அடையலாம்.

—"மன்றம்"

கிறது. கரும்புச் சாற்றுக்கும் அதுபோல இங்கே சர்க்கரை போடுகிறார்கள். வேடிக்கைதான்!

அனைத்தும் பயன்.

தென்னை, மனிதனுக்கு நிறைந்த பயன் தருகிற மரம். தென்னை மரத்தில் வீணாகின்ற பகுதி எதுவும் இல்லை. தென்னை ஓலை கொண்டு பின்னப்படும் தென்னங் கீற்று பந்தல் போட உதவுவது, தென்னை மட்டை அடுப்புக்குத் தீ மூட்ட உதவும். தேங்காய் மட்டையிலிருந்து கயிறு தயாரிக்கிறார்கள். தென்னையின் அடி முதல் நுனி வரை அனைத்துமே மனிதனுக்குப் பயன் படுபவை.

மனிதனுக்காகவே பிறந்தது தென்னை என்றுகூடச் சொல்லலாம். ஒரு பெரிய தென்னந் தோப்பு சொந்தமாக இருந்தால் ஆண்டுதோறும் நல்ல வருமானம் கிடைக்கும். தென்னையிலிருந்து கள் இறக்குவதும் பதநீர் இறக்குவதும் தம்பி தங்கைகள் அறிந்த செய்தி.

தென்னைமரத்தைப் பற்றி இவ்வளவு அதிகம் பேச வேண்டிய காரணமென்னவென்று நீங்கள் யோசிக்கக்கூடும்.

தமிழ் மூதாட்டி ஔவையாரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அந்தத் தமிழ்க் கிழவி எழுதி வைத்த ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நீதி நூல்களை நீங்கள் படித்திருக்கிறீர்கள். மூதுரை என்னும் நீதி நூலும் ஔவைப் பாட்டி இயற்றியது தான். மொத்தம் முப்பது பாட்டு ஒவ்வொன்றும் அருமையான முத்துக்குச் சமமானது. உயர்ந்த நீதிகளை அழகாக எடுத்துரைக்கும் நூல் மூதுரை. இதற்கு வாக்குண்டாம் என்று இன்னொரு பெயரும் உண்டு. முதற் பாட்டு 'வாக்குண்டாம்' என்று தொடங்குகிறது. அதனாலேயே இந்நூலுக்கு இப்பெயர் வழங்குகிறது.

தென்னையின் சிறப்பை மூதுரை குறிப்பிடுகிறது. நன்றிக்கு உறைவிடமாகத் தென்னை மரத்தின் இயல்பை ஔவையார் படம் பிடித்துக் காட்டுகிறார்.

நன்றி என்றவுடன் வாலைக் குழைத்துவரும் நாய் தான் நம் கண் முன் நிற்கும். 'நாய் நன்றியுள்ள பிராணி' என்று முதல் வகுப்பிலேயே பாடம் சொல்லித் தந்துவிடுகிறார்கள். நாயின் விசுவாசம், நன்றியுணர்வு பற்றி எத்தனையோ கதைகள். வளர்த்த எஜமானுக்குத் துரோகம் இழைக்காது நாய்; அது மட்டுமன்று, தன்னை வளர்த்தவருக்குத் தீங்கு நேரவும் அது அனுமதியாது. மாதம் நூறு வெள்ளி சம்பளம் கொடுத்துக் காவலுக்கு வைக்கும் ஆறறிவு படைத்த மனிதன் கூடச் சந்தர்ப்பத்தில் துரோகம் செய்வதும் மனைவி கணவனுக்குத் துரோகம் செய்வதும் அரிய நிகழ்ச்சிகள் எனினும் நடப்பவை. ஆனால் நாய் தன்னை வளர்த்தவனுக்குக் கேடு செய்ததாகக் கதையில்கூட நாம் கேள்விப்பட்டதில்லை. நன்றிக்கு மதிப்புத்

தருவதில் நாய் அவ்வளவு சிறந்து விளங்குகிறது.

தென்னையின் சிறப்பு.

தென்னைக்கும் அத்தகைய சிறப்பு உண்டு என்று மூதுரை நமக்குத் தெளிவு படுத்துகிறது. அந்த மூதுரைப் பாட்டு இது தான்.

நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்.

ஒருவனுக்கு உதவி செய்கிறீர்கள். அந்த உதவிக்குக் கைம்மாறாக அவன் உங்களுக்குத் திருப்ப உதவுவானா என்று ஐயப்படுகிறீர்கள். நல்ல நண்பனுக்குச் செய்யும் உதவிக்குப் பலன் கிடைப்பது திண்ணம்; அதிலே ஐயுற வேண்டியதில்லையென்பது முதல் இரண்டு வரிகளின் கருத்து.

நின்று தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தான்தருதலால், நன்றி ஒருவற்குச் செய்தக்கால், அந்நன்றி என்று தருங்கொல் என வேண்டா—இவ்வாறு அமைப்பை மாற்றிக் கொண்டால் பொருள் எளிதில் விளங்கிவிடும்.

தென்னை மரத்தின் தாள் அதன் அடிப்பாகம். தென்னை மரத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுகிறோம் அல்லவா? வேர் மூலமாகத்தான் தென்னை அந்தநீரைக் குடித்து வளர்கிறது. அவ்வாறு காலால் உண்ட நீரைத் தென்னை தன் தலையாலே தருகிற தென்கிறார் ஔவையார்.

நாம் ஊற்றுவது வெறுந் தண்ணீர். அதற்கு விலைமதிப்பே இல்லை. தென்னை நமக்குத் தருவதோ இளநீர்!—சுவையான இளநீர் — குடிக்கத் தெவிட்டாத இளநீர்!

நாம் தரும் தண்ணீர்க்குக் தென்னை நமக்குக் கைம்மாறாக அளிப்பது இளநீர்! தண்ணீரைக் குடிக்கும் தென்னை நாம் குடிக்க இனிக்கும் இளநீரைத் தருகிறது. எத்தனை சீரிய பண்பு! நன்றி மறவாத செயல்! தான் வளரத் தண்ணீர் வார்த்த மனிதனைத் தென்னை மறந்து விடவில்லை. வளர்ந்து பெரிய மரமானவுடன் இளநீர்க் காய்களைக் குலைகுலையாக வழங்கி வளர்த்தவர்க்கு நன்றியை அது திரும்பச் செலுத்தி விடுகிறது.

ஔவையார் சுட்டிக் காட்டுகிற அடுத்த உண்மை நினைக்க நினைக்க இன்பம் பயப்பது. நாம் தென்னைக்கு நீர் பாய்ச்சுவது அதன் அடியில்—அதாவது காலில். அது நமக்குத் தரும் இளநீர்

நீரோ அதன் காயிலுள்ளது. காய் தலையில் காய்ப்பது.

உயரிய பண்பு

காலால் உண்ட நீரைத் தலையாலே திருப்பித் தருகின்ற தென்னையின் உயரிய பண்பையே மூதுரை எடுத்துக் காட்டுகிறது.

'நீங்கள் காலால் இடும் வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கிறேன்' என்று உண்மை அன்புகொண்ட வேலைக்காரர்கள் தங்கள் முதலாளிகளிடம் சொல்வது வழக்கம். தென்னை தான் காலால் பெறுகின்ற பயனைத் தலைவணங்கித் திருப்பித் தருகிறது. பெறுவது தண்ணீர்; தருவதோ இளநீர்!

தாளுண்ட நீரைத் தலையால் தருகிறது தென்னை; ஆகவே நல்லவர்களுக்குச் செய்கின்ற உதவிக்குக் கைம்மாறு கிடைப்பது திண்ணம். அவர்கள் திரும்ப விரைந்து உதவுவார்கள் என்பது கருத்து.

நல்லவருக்கு உதவி செய்யும்போது அவர்கள் நமக்கு உதவுவார்களோ என்று ஐயப்பட வேண்டாம். அவர்கள் நிச்சயமாக உதவுவார்கள். உங்கள் உதவிக்கு ஒன்றுக்கு மும்மடங்காகப் பலன் கிடைக்கும். தென்னை அதற்குச் சான்று என்று செப்புகிறார் ஔவையார்.

நல்லவர்களுக்குச் செய்கின்ற உதவிக்குப் பலன் திண்ணமாக உண்டு,

ஔவையார் கூறும் நீதிஎன்ன? நல்லவர்களுக்கு உதவுங்கள் என்று அறிவுறுத்தும் ஔவைப் பாட்டி, உதவி பெற்றவர்கள் நன்றி மறக்கக்கூடாது. திரும்ப உதவிபுரிய வேண்டுமென்றும் வலியுறுத்துகிறார். உதவியும் அதற்குத் திரும்பச் செய்கின்ற நன்றியுதவியும் இயல்பானவை என்பதையே தென்னையின் அமைப்பு காட்டுகிறது.

தென்னைக்கு மனிதர்களைப் போல அறிவு இல்லை. நன்றி மறக்கக்கூடா தென்னும் நீதியை அது படித்ததில்லை; எனினும் அது இயல்பாகவே நன்றியின் உறைவிடமாகக் காட்சியளிக்கிறது.

ஒரு மரம் மனித குலத்துக்குச் சொல்லாமல் சொல்லும் நீதி இது! தென்னை கற்றுத் தரும் பாடம் நன்றி மறக்கக்கூடாது என்பது. உதவி பெறுபவர்கள் விரைந்து மாற்றுதவியைப் புரிவது உலக இயற்கை. தென்னை மரம் தன் செயலால் பறைசாற்றுகின்ற உயரிய நீதி இதுதான். உதவுக—உதவி கிடைக்கும் என்னும் உண்மையைத் தென்னையைக் காட்டி அறிவுறுத்தும், மூதுரை இலைமறை காய்மறையாக மற்றொரு நீதியையும் சொல்லி விடுகிறது.

சிறந்த உதவி

கைம்மாறு எதிர்பாராமல் செய்யப்படுவதே சிறந்த உதவி. உதவி செய்கின்றவர்களுக்கு அத்தகைய உள்ளம் வேண்டும். பலன்

கிடைக்கும் என்றெல்லாம் யோசிக்கக்கூடாது. உதவி புரிவது உன் கடமை. அதற்குப் பலன் இயல்பாகவே உனக்குக் கிடைக்கும். ஆகவே தயங்காமல், மயங்காமல் பிறருக்கு உதவுக வென்று ஊக்குகிறது மூதுரை.

நன்றி மறவாமை பற்றி நீங்கள் எத்தனையோ கதைகளைப் படித்திருப்பீர்கள், கீரிப்பிள்ளை பாம்பைக் கடித்துக் குழந்தையைக் காப்பாற்றிய கதை எல்லோருக்கும் தெரியும்.

மனிதனுக்கு நன்றியுணர்வு இயல்பாக அமைந்திருக்கிறது. அதனைச் சிறுவர் சிறுமிகள் வளர்த்துக் கொள்ள வேண்டும். பிறர்க்கு உதவுகின்ற எண்ணமும் அதனைச் செயலில் காட்டுகின்ற ஊக்கமும் வளரவேண்டும். அதே சமயத்தில் உதவியவர்களை மறவாத நன்றியுடைமையும் நம் பண்போடு சேர்ந்து வரவேண்டும்.

தமிழ் நீதி நூல்கள் நன்றியுடைமையைப் பெரிதும் போற்றுகின்றன. 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை—செய்நன்றி கொன்ற மகற்கு' என்பது குறள். நன்றியை மறப்பது பெரும் பாவம். அதற்குப் பரிகாரமே கிடையாது என்பதே குறளின் கருத்து.

தாளுண்ணும் நீரைத் தலையால் தருகின்ற தென்னையை வாழ்த்துவோம். நம் பண்பில் நன்றியுணர்வை வளர்த்துக் கொள்வோம்.

—(தமிழ் முரசு
மாணவர் மணி மன்ற மலர்.)

ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு சம்பளம்

மணியார்டர்மூலம் அனுப்பப்படும்

1958-60ம் வருஷத்திலிருந்து மாணவர்களிடமிருந்து சம்பளம் பெறாமல் இயங்கும் தனியார் ஆரம்பப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கும் முறை பற்றி சென்னை சர்க்கார் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டுள்ளனர்.

சம்பளத்தை சர்க்கார் நேரடியாக மணியார்டர் மூலம் அனுப்புவர். மணியார்டர் கமிஷன் இந்த சம்பளத்திலிருந்து கழித்துக்கொள்ளப்படும். பிராவிடண்டு நிதிக்கான தொகையும் சம்பளத்திலிருந்து கழித்துக்கொள்ள ஜில்லா கல்வி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது

(சு. மி.)

வெற்றிலை போடலாமா?

"வைத்திய பூபதி"

வெற்றிலை போடும் பழக்கம் நம் நாட்டு மக்களிடையே பல நூற்றாண்டுகளாகப் பழக்கத்திலிருந்து வருகிறது. பற்களை வெள்ளையாக வைத்துக்கொள்வதற்காக இப்பொழுது நம் நாட்டில் வெற்றிலை போடும் பழக்கம் குறைந்து வருகிறது. அதனால் உடல் நலம் குறைந்து வருகிறது. வாய் நாற்றம் பெருகிவருகிறது. பற்களும் பிடுங்கப்பட்டுவருகிறது. பல் வைத்தியர்களும் பெருகிவருகிறார்கள். மற்ற நாடுகளைக் காட்டிலும் நம் நாட்டில் பல் வியாதி மிகக் குறைவு என்பதை குறிப்பிடத்தான் வேண்டும்.

இலக்கியத்திலே!

தமிழர் சமூக வாழ்விலே வெற்றிலைப் பழக்கம் எப்போது ஏற்பட்டது என்று அளவிட்டுக் கூற முடியாவிடினும், இது நம் நாட்டுக்கேஉரிய பழக்கமாயிருக்கலாம் என்று நிச்சயிக்கப் பல சான்றுகள் இருக்கின்றன. குச்சு வீடு முதல் பச்சு மாளிகைவரையிலும், ஆண்டி முதல் அரசன் வரையிலும், பிறப்பு முதல் இறப்பு வரையிலும், மங்கல அமங்கலச் சடங்குகளிலும் வெற்றிலை முதலிடம் பெற்றிருக்கின்றது. சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர்த் தழ்ந்த கடைச்சங்க காலத்தில் கூட வெற்றிலை போடும் பழக்கம் மிகுந்திருந்ததென்பதற்கு இலக்கியங்கள் சான்று பகருகின்றன.

பத்துப் பாட்டில் ஒன்றாகிய பட்டினப் பாலையிலே உருத்திரங் கண்ணனார். புகார் நகரிலே பல வகைக் கொடிகள் பறந்த பாடங்களைக் குறிப்பிட்டுவரும் பகுதியில் 'பாகுகுத்த மஞ்சிகை' என்று சில மாடங்களைக் குறிப்பிடுகிறார். அதற்கு உரைகாரர் நச்சினார்க்கினியர். "பாக்கு வெற்றிலை சொரிந்த கட்டிடம்" என்று பொருள் கூறுகிறார்.

மதுரைக் காஞ்சி என்ற மற்றொரு சங்கப் பாட்டில் மாங்குடி மருதனார் என்ற புலவர் மதுரை நகர வீதியில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு விற்கப்பட்ட செய்தியை

"தகைசெய்தீஞ்சேற்று
இன்னீர்ப் பசுங்காய்
நீடுகொடி இலையினர்
கொடு சுடு நீற்றினர்"

என்று குறிப்பிடுகிறார். இதற்கு உரையாசிரியர் "உடம்பிற்கு அழகைக் கொடுக்கும் இனிய கருங்காலி சீவி காய்ச்சின களி கலந்த இனிய நீரினையுடைய பாக்குடனே வளர்ந்த கொடியின்ற

வெற்றிலையினையுடையாரும், சங்கு சுடுதலால் உண்டான சுண்ணம்புடையாரும்" என்று உரை வரைகிறார்.

சிலப்பதிகாரத்திலே இந்திர விழா ஊரெடுத்த காதையில் புகார் நகரிலுள்ள பல தெருக்களைப் பற்றிக் கூறிக்கொண்டுவரும் இளங்கோவடிகள்,

"பாசவர், வாசவர், பைந்நிண
விலைஞரொடு.........
இருக்கையும்"

என்று கூறும் பகுதியில், பாசவர் என்ற சொல்லுக்கு "வெற்றிலை கட்டுவார்" என்று அரும்பத உரையாசிரியரும், இலையமுதிடுவார் (இலையமுது = வெற்றிலை) என்று அடியார்க்கு நல்லாரும் உரை எழுதுகிறார்கள்.

ஏழாம் நூற்றாண்டில் இருந்தவராகக் கருதப்படும் 'நம்மாழ்வார்' திருவாய்மொழியில் திருக்கோளூர்ப் பதிகத்தில் 'உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையுமெல்லாம் கண்ணன் எம்பெருமான் என்றென்றே" என்று குறிப்பதிலிருந்து அக்காலத்திலும் ஆண்டவனுக்கு வெற்றிலை படைக்கும் வழக்கம் இருந்ததாகத் தெரிகிறது. திருமால், சிவன் ஆலயங்களுக்கு நிபந்தங்கள் ஏற்படுத்திய தமிழ் மன்னர்கள் வெற்றிலை பாக்குக் தனி நிபந்தங்கள் ஏற்படுத்தியிருந்த செய்திகள் வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றது.

மூலிகை...

வெற்றிலை ஒரு மூலிகை. "நீர்க்கோவையைக் கெடுத்து, வாதத்தைப் போக்கி, மந்தத்தைத் தடுத்து, அஜீரணத்தை எடுத்து, கபத்தை அறுத்து, சுறுசுறுப்பைக் கொடுத்து, குருதி (இரத்த) யோட்டத்தைத் துரிதபபடுத்தி, உடல் வளர்ச்சியை அளிக்கிறது.

தேள்கடி போன்ற சாதாரண நஞ்சுக்கு மாற்றாக வெற்றிலைச் சாறு கொடுக்கப்படுவது இன்று கிராமங்களில் வழக்கமாக இருக்கிறது.

உண்டபிறகு பாக்கு, சுண்ணம்பு, லவங்கம், ஏலக்காய், முதலிய பொருள்களுடன் வெற்றிலைச் சுருளை மெல்லுவதால் உண்டாகும் மணம் வாய்க்கு ஒரு தனி இனிமையைத் தருகிறது.

உண்ட பிறகு வெற்றிலை போட்டுக்கொள்வதால் பற்களுக்கு அடிப்பாகத்தில் உள்ள பள்ளங்களிலும், இடுக்குகளிலும் புகுந்துகொண்டிருக்கும் அழுக்கால் உற்பத்தியாகும் பூச்சிகள் கொல்லப்படுகின்றன. பிராகிருத மொழியிலுள்ள புத்த ஜாதகக் கதைகளிலும் வடமொழியிலுள்ள இதோபதேசத்திலும் வெற்றிலையின் உபயோகம் விசேடமாய்க் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நம் நாட்டில் எந்தச் சிறிய மங்களச் சடங்கும் வெற்றிலை இல்லாமல் தொடங்கவும் பெறாது, முடியவும் பெறாது.

வெற்றிலையிலே இயற்கையான 'குளோரோபில்' இருப்பதால் வாய் நாற்றம் போகிறது. வாய் நாற்றம் இருப்பவர்களிடம் சாதாரணமாக மற்றவர்கள், சார்! நீங்கள் வெற்றிலை போட்டு வாருங்கள், வாய் நாற்றம் ஓடிப்போகும், என்று செல்வதைக் காணலாம்.

சத்துப்பொருள்

முட்டைக் கோஸில் நிறையச் சத்து இருப்பதாக வாங்கிச் சாப்பிடுகிறோம். எல்லா வகையிலும் அதைவிட அதிகமாகச் சத்துப் பொருள் வெற்றிலையிலே இருக்கிறது என்றால் ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா?

இதோ இந்த அட்டவணையைப் பாருங்கள்.

சத்துப் பொருள் விவரம்.	வெற்றிலை.	முட்டைக்கோஸ்
கால்சியம் (சுண்ணாம்பு)	9 227	0·035
இரும்பு	5·74	0 074
எரிபொருள்	6·18	6 08
தாதுப் பொருள்	2·25	0·61
கொழுப்பு	0·09	0·10
புரோட்டின்	3·08	1 72
100 கிராமில் உள்ள கலோரி,	44 0	33·02
வைட்டமின், 'ஏ' vitamin ஏ, பி.	9·645	20·02
வைட்டமின் சி	3 9	121 2

எச்சரிக்கை...

இந்த அட்டவணையைப் பார்த்துவிட்டு வெற்றிலையிலே இவ்வளவு அரிய சத்துப்பொருள்கள் இருக்கிறதா என்று ஆச்சரியப்பட்டு நாள் பூராவும் வெற்றிலையை மென்றுகொண்டே இருக்கலாம் என்று எண்ணிவிடாதீர்கள். தினசரி மூன்று முறை வெற்றிலை போடுவது உத்தமம். ஐந்து முறை போடுவது மத்திமம். பத்து முறை போடுவது அதமம். வெற்றிலை போட்ட கொஞ்ச நேரத்திலேநன்றாகவாயைக்கொப்பளிக்க வேண்டும். அவ்விதம் செய்யாவிட்டால் பல் இடுக்குகளில் பாக்குத் துண்டுகள் பதிந்துக் கொள்ளும். குச்சி எடுத்துக் குத்துவீர்கள். அதிலிருந்து பல் வலி ஆரம்பம். ஈறு வீங்கும். ச்சு! ச்சு! அப்பப்பா 'பல் வலி, பொறுக்க முடியவில்லையே! என்று பல டாக்டரிடம் ஓடுவீர்கள். இரண்டு ரூபாய் கொடுத்துப் பல்லைப் பிடுங்க வேண்டியது தான். இவ்விதமாகப் பல்லெல்லாம் பிடுங்கப்பெற்று வாய், பொக்கை வாய் ஆகிவிடும். ஆகவே வெற்றிலை போடுவதில் அளவோடு இருக்கவேண்டும். இல்லையேல் பணத்திற்கும் பணம் நஷ்டம், பற்களுக்கும் கெடுதல்.

காசு அதிகம் செலவில்லாமல் பற்களைப் பாதுகாக்க, ஆரோக்கி

(அடுத்த பக்கம் பார்க்க)

★ பிரிட்டனில் தமிழ் ★

ஜான் மார்

தென்னாட்டு மொழி வளர்ச்சிக்கு ஆங்கிலேயர் பெரும் பணி புரிந்திருக்கிறார்கள். அதை விவரிக்கும் இந்தக் கட்டுரையாசிரியர், லண்டன் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 'ஆப்பிரிக்க – கீழ்த்திசைக் கலை இலக்கியக் கல்லூரி'யின் தமிழ் விரிவுரையாளர்.

திராவிட மொழிகளைக் கற்பதில் பிரிட்டிஷார் அக்கறை காட்டுகிறார்கள். வியாபாரத் தொடர்புக்காக, கிழக்கிந்தியக் கம்பெனி ஊழியர்கள், தென்னாட்டு மொழிகளைக் கற்ற காலம் ஒன்று உண்டு, மக்களுடன் நெருங்கிப் பழகிச் சமயப் பிரசாரம் செய்யப் பாதிரிமார்கள், அந்த மொழிகளைக் கற்ற காலமும் ஒன்று உண்டு. தென்னாட்டு மக்களின் கலை-பண்பாடு-மொழி இவற்றை ஆராய, பிரிட்டிஷ் பல்கலைக் கழகங்களில் திராவிட மொழிப் பிரிவு ஏற்பட்ட காலமும் ஒன்று உண்டு. ஆரம்ப காலத்தில் கிழக்கிந்தியக் கம்பெனி ஊழியர்கள் வியாபாரத் தொடர்புக்காகவே தென்னாட்டு மொழிகளைப் பயின்றார்கள், பதினெட்டாம் நூற்றாண்டில் தென்னாட்டு அரசியலிலும் அரசியல் போராட்டங்களிலும் பிரிட்டிஷார் சிக்கிக் கொள்ள நேர்ந்தது.

திராவிட மொழிகளை முறையாகக் கற்பதில் ஆர்வம் காட்டியவர், ஜோஸப் பெஷி என்ற கத்தோலிக்கப் பாதிரியார். அவர் 1728-இல் தமிழ் இலக்கணம் பற்றி லத்தீன் மொழி[...] நூலை வெளியிட்டார். [...]டாம் நூற்றாண்டின் பி[...]யில்தான், பிரிட்டிஷா[...] திராவிட மொழிகளில் [...] ஏற்பட்டது. ராபர்ட் ஓ[...]பவர் தென்னாட்டில் பல [...] சுவடிகளைச் சேகரித்துக் கொ[...] 1763-இல் சென்னையிலிரு[...] இங்கிலாந்துக்குப் புறப்பட்ட[...]

காலின் மெக்கன்ஸீ என்ப[...] செய்த சேவை போற்றற்குரிய[...] அவர் பல ஏட்டுச் சுவடிகளைச் சேகரித்துத் தொகுத்தார். ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார். மெக்கன்ஸீ சேகரித்த நூல்களில் பெரும் பகுதியை, இன்று சென்னையில் உள்ள 'கீழ்த்திசைச் சுவடிகள் நிலையம்' (ஓரியண்டல் மார்னஸ்க்ரிப்ட் லைப்ரரி) என்ற நூல் நிலையத்தில் காணலாம்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

யத்தை வளர்க்க, அழகுக்கு அழகு செய்ய வெற்றிலை போடுங்கள். அளவோடு போட்டுப் பயன் பெறுங்கள், வெற்றிலையைப் போட்டுக்கொண்டு கண்ட இடங்களில் எல்லாம் துப்பி அநாகரீகம் பிடித்தவர்கள் என்று பிறர் பரிகசித்து வெறுக்கும்படிச் செய்யாதீர்கள்.

"சௌபாக்கியம்"

மெக்கன்ஸி 1754-இல் ஸ்டோன்வே என்னும் இடத்தில் பிறந்தார். இந்தியக் கணித முறையைப் பற்றி - குறிப்பாக லாகரிதம்பற்றி - ஆராய நேப்பியர் பிரபு அவரை அழைத்தார். மெக்கன்ஸியின் உழைப்பற்றி இந்தக் கட்டுரையில் முற்றும் விவரிக்கயிடமில்லை. மெக்கன்ஸி 1783-இல் சென்னைக்கு வந்தார். சுமார் 38 ஆண்டுகள் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். பல நூல்களைத் தொகுத்தார். 1815-இல் சர்க்கார் அவரை ஸர்வேயர் ஜெனரலாக நியமித்தார்கள்.

மெக்கன்ஸீ சென்னைக்கு வந்ததும் தமக்கேற்ற இடம் மதுரை என்று நிச்சயித்துக்கொண்டார்.
...ல் நேப்பியா பிரபுவின்
...ா ஸாமுவேல் ஜான்ஸன்
...க்கொண்டிருந்தார்.
...டைய உதவியால், மெக்கன்
... புலவர்களுடன்தொடர்பு
...டது. பிராமண அறிஞர்
...ன் நெருங்கிப் பழகும்
...துதான் நாட்டின் கலை—
...ழி-பண்பாடு ஆகியவைபற்றி
...ாயவும், ஏடுகளைச் சேகரிக்க
... நிச்சயங் கொண்டார்.
...கயில் கிடைத்த ஏடுகளை எல்லாம் அவர் சேகரித்தார். இந்தியப் பண்பாட்டுக்கும் வரலாற்றுக்கும் பிராம்மண தர்மத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை அறிந்த அவர், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் நூல்களைச் சேரித்தார். ஐரோப்பாவிலோ ஆசியாவிலோ மெக்கன்ஸியைப் போல வரலாற்று ஆதாரங்களைச் சேகரித்தவர் வேறு எவருமில்லை.

வடமொழி, பாரசீகம், அரபு, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழி நூல்களை மெக்கன்ஸி வாங்கினார். வடமொழி பாரசீகம், அரபு, நூல்களை இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்றார்கள். ஆனால் தென்னிந்திய மொழி நூல்கள் மட்டும் சென்னையிலேயே தங்கிவிட்டன.

1821-இல் மெக்கன்ஸி காலமானார். அவர் சேகரித்த நூல்களைக் கிழக்கிந்தியக் கம்பெனி வாங்கிற்று. வடமொழியில் நிபுணரான எச். எச். வில்ஸன் அவற்றை வகைப்படுத்தி ஒரு பட்டியலைத் தயாரித்தார். அந்த நூல்களைச் சென்னைக் கல்லூரி நூல் நிலையத்தில் வைத்திருந்தார்கள், 1836-இல் பூஜ்பார் வில்லியம் டாய்லர் என்பவர் அவற்றை ஆராய்ந்தார். அதன் பிறகு தீவிரமாக எவரும் ஆராயவில்லை. பின் காலத்தில் அந்த நூல்களைத் தனி நிலையத்தில் வைத்துக் காத்தார்கள். இப்போது கீழ்த்திசைச் சுவடிகள் நிலையத்தில் அவை இருக்கின்றன. மெக்கன்ஸி தொகுப்பில் 192 தமிழ்ச் சுவடிகளும், 156 தெலுங்குச் சுவடிகளும், 130 கன்னடச் சுவடிகளும், 6 மலையாளச் சுவடிகளும் இருக்கின்றன.

தமிழ் நாட்டின் சிறப்பைக் கூறும் முதல் கட்டுரை 1798-இல் 'எஷியாட்டிக் ரிஸர்ச்சஸ்' என்ற சஞ்சிகையில் வெளிவந்த மாமல்லபுரத்தின் சிறப்பைக் கூறும் கட்டுரையை வில்லியம் சேம்பர்ஸ்

என்பவர் எழுதினாராம். திராவிட மொழிகளைப் பற்றி ஒரு குறிப்பை 1801-இல் கோல்புருக்ஸ் என்பவர் 'ஏஷியாட்டிக் ரிஸர்ச்சி'ஸில் எழுதினார்.

ராபர்ட் டிரம்மண்ட் மலையாள மொழியைக் கற்று, ஆங்கிலத்தில் அதன் இலக்கணத்தை எழுதினார் 1799-இல் அது பம்பாயில் பிரசுரமாயிற்று. திராவிட மொழியைப்பற்றி முதல் முதலாக ஆங்கிலத்தில் வெளிவந்த நூல் அது. வங்க-சமஸ்கிருத இலக்கியங்களை ஆராய்ந்து புகழ் பெற்ற வில்லியம் காரி என்பவர் தெலுங்கு மொழியைக் கற்று, அதன் இலக்கணத்தை விளக்கி ஆங்கிலத்தில் ஒரு நூல் வெளியிட்டார். இது ஸ்ரீராம்பூரில் 1814-இல் பிரசுரமாயிற்று. ஏறக்குறைய அந்த சமயத்தில் அலெக்ஸாண்டர் டங்கன் காம்பெல் என்பவரும் ஆங்கிலத்தில் தெலுங்கு இலக்கண நூலை வெளியிட்டார். அதன் முன்னுரையில் திராவிட மொழிகளுக்குள் காணும் ஒற்றுமையும் வடமொழியிலிருந்து அவை வேறுபட்டிருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நூலின் இரண்டாம் பதிப்பு 1820-இல் வெளிவந்தது. திராவிட மொழியில் அக்கறை கொண்ட முதல் ஆங்கிலேயர் காம்பெல்தான். ஜான் மெக்கால் 182 -ல் கன்னட இலக்கணத்தை வெளியிட்டார்.

தமிழ் மொழியில் ஆர்வமுள்ள பெஷி (வீரமா முனிவர்) 1728-இல் தமிழ் இலக்கணம் பற்றி லத்தீன் மொழியில் ஒரு நூல் எழுதினார். அந்த நூலை, மொழியியலில் ஆர்வமுள்ள ஐரோப்பியர்கள் விரும்பிப் படித்தார்கள். ஐரோப்பியர்களுக்கு லத்தீன் மொழியில் பரிசயம் இருந்ததால ஆங்கில நூலுக்கு அவசியம் ஏற்படவில்லை. 1822-இல் அதாவது மூலநூல் வெளிவந்து நூறு ஆண்டுகளுக்குப் பின் - பாபிங்டன் என்பவர் அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன் பகுதியில் பல ஐரோப்பியர்கள், திராவிட மொழிகளைக் கற்பதிலும் அகராதிகளைத் தயாரிப்பதிலும் ஈடுபட்டார்கள். பல நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்கள்.

1821-இல் அலெக்ஸாண்டர் காம்பெல் என்பவர் தெலுங்கு ஆங்கில அகராதியை வெளியிட்டார். இதுதான் தென்னாட்டு மொழிகளில் வெளிவந்த முதல் அகராதி 1824-இல் ரீவ்ஸ் என்பவர் ஆங்கில - கன்னட அகராதியைத் தயாரித்தார்.

ஆங்கில - தெலுங்கு அகராதி தெலுங்கு ஆங்கில அகராதியையையும், 1852-இல் ஸி. பி. பிரௌன் என்பவர் வெளியிட்டார். தெலுங்கு மொழியின் பிரமாண நூல்கள் வரிசையில் இவை சேர்ந்து விட்டன. இவற்றின் திருந்திய மறு பதிப்புக்கள் 1395, 1903 இந்த வருஷங்களில் வெளிவந்தன. பூஜ்யர் பெய்லி

1846-இல், கோட்டயத்தில் மலை யாள-ஆங்கில அகராதியை வெளியிட்டார்.

ஔவையார் அருளிச் செய்த நீதி நூல்களைப் பூஜ்யர் ஜான் என்பவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இவை 1801-இல் 'ஏஷியாடிக் ரிஸர்ச்சஸ்' என்ற சஞ்சிகையில் வெளிவந்தன. அதற்கு முன்பே திருக்குறளை லத்தீன் மொழியில் பெஷி வெளி யிட்டுவிட்டார். இதை ஆங்கிலத் தில் மொழி பெயர்த்து, 1816-இல் வெளியிட்டார்கள். ஃபோர்ட்-ஸெயிண்ட் ஜார்ஜ் கல்லூரியை நிறுவிய எல்லிஸ் என்பவரே ஆங்கில மொழி பெயர்ப்பை வெளியிட்டவர். மெக்கன்ஸி சேகரித்த ஏடுகளை ஆராய்ந்த பூஜ்யர் வில்லியம் டாய்லர் என்ப வர், திருவிளையாடல் புராணத் தையும் மதுரையின் சிறப்பைக் கூறும் வேறு பல நூல்களையும் ஆங்கிலத்தில் வெளியிட்டார். பூஜ்யர் ஜி. யூ. போப் என்பவர் திருக்குறளையும் மாணிக்கவாசக ரின் திருவாசகத்தையும் ஆங்கி லத்தில் மொழி பெயர்த்திருக்கி றார்.

திருநெல்வேலியில் சமயப்பணி செய்ய வந்த பூஜ்யர் கால்டுவெல் என்பவர், தமிழ் மொழியில் ஈடு பாடு கொண்டார். அவர் எழுதிய ஒப்பியல் இலக்கணம் இன்றும் போற்றப்படுகிறது. இந்த நூல் 1856-இல் வெளிவந்தது; 1875-ல் மறு பதிப்பு வெளி யாயிற்று.

பூஜ்யர் கால்டுவெல் என்பவர் 1838-இல் இந்தியாவுக்கு வந்தார் 1877-இல் திருநெல்வேலி மேற் றிராணியாராகப் பதவியேற்றார். விவிலிய வேதத்தைத் தமிழில் எழுதியவரும் அவரே.

கால்டுவெல்லைப் போல் சிறப் பாகத் தமிழ்த் தொண்டு செய்த மற்றோர் ஆங்கிலேயர் பூஜ்யர் ஜி. யூ. போப். இவர் 1820-இல் நோவா ஸ்கோஷியாவில் பிறந் தார். சமயப் பணி செய்ய 1839-இல் சென்னைக்கு வந்தார். கப்பல் பிரயாணம் செய்யும்போதே, தமிழ் மொழியைக் கற்றார் 1859-இல் உதகமண்டலத்தில் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவினார். 1880-இல் தாய் நாடு திரும் பினார்.

பிரிட்டிஷ் பல்கலைக் கழகம் ஒன்றில் தமிழுக்கு இடந் தேடித் தந்தவர் போப். தமிழ் மொழியி லும் இலக்கியத் துறைகளிலும் நல்ல ஆராய்ச்சியுள்ள போப் அவர்களை, 1884-இல் ஆக்ஸ்ஃ போர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ், தெலுங்கு போதகாசிரிய ராக நியமித்தார்கள். 1906-இல் ராயல் ஏஷியாடிக் கழகம், போப் அவர்களுக்குத் தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவித்தது.

போப் எழுதிய தமிழ்க் கையேடு, 1855-இல் வெளிவந் தது. அதை எல்லாரும் விரும் பிப் படித்ததால், ஏழு பதிப்புக் கள் வெளிவந்தன. திருக்குறளை யும் திருவாசகத்தையும் போப் அழகாக மொழி பெயர்த்திருக்கி

ளூர். பூஜ்யர் ஆர்டன் என்பவர் தமிழ், தெலுங்கு இரண்டு மொழிகளையும் கற்று இலககணம் எழுதினூர். 1873-இல் தெலுங்கு இலக்கண மும் 1891-இல் தமிழ் இலக்கணமும் வெளிவந்தன.

டாக்டர் பார்னெட் என்பவர் திராவிட மொழிகளில் வல்லவர் போப் துரையின் துணைக் கொண்டு, அவர் பிரிட்டிஷ் சுவடி நிலையத்திலுள்ள தமிழ் நூல்களை வகைப்படுத்தி, 1909-இல் ஒரு பட்டியலை வெளியிட்டார். 1910-இல் கன்னட நூல்களின் பட்டியலையும் 1912-இல் தெலுங்கு நூல்களின் பட்டியலையும் தயாரித்தார்.

பிரிட்டனில் வடமொழிக்கு உள்ள அவ்வளவு செல்வாக்குத் திராவிட மொழிகளுக்கு இல்லை. லண்டன் பல்கலைக் கழகந்தான் தமிழ் மொழி போதிப்பதில் தனி அக்கறை காட்டுகிறது. லண்டனிலுள்ள கீழ்த்திசை—ஆப்பிரிக்கக் கலைகளையும் மொழிகளையும் போதிக்கும் பள்ளிக்கூடப் பாடத் திட்டத்தில், தமிழ் இடம் பெற்றிருக்கிறது. ஸ்ரீமான் ஸி. எஸ். கே. பதி, பூஜ்யர் கார்டன் மாத்யூஸ் முதலிய பெரியோர்கள் இந்தப் பள்ளிக்கூடத்தில் தமிழாசிரியர்களாகப் பணி புரிந்திருக்கிறூர்கள் : பூஜ்யர் கார்டன், மாத்யூஸ் அவர்கள், சிவஞான போதத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறூர். இந்த நூல் 1946-இல் எழுதி வெளி வந்தது.

சென்ற யுத்தத்துக்குப் பிறகு மிஸ்டர் எம். எஸ். எச். தாம்சன் இந்தப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் பதவி ஏற்றதும், தமிழுக்கு யோகம் பிறந்தது. பலருக்குத் தமிழ் மொழியில் ஆர்வம் ஏற்பட்டது. தாம்ஸன் தென்னுட்டில் நீண்டகாலம் கல்விப் பணி புரிந்தவர். காலஞ் சென்ற ஸ்ரீமான் ஷண்முகம் பிள்ளையிடமும் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரிடமும் தமிழ்ப் பாடம் கேட்டவர். வித்துவான் பட்டம் பெற்றவர். தெலுங்கிலும் பாண்டித்தியமுள்ளவர். இவர் 1953-இல் பதவியிலிருந்து விலகி, மொழியாராய்ச்சியில் ஈடுபட்டார்.

இந்தப் பள்ளியின் மொழியாராய்ச்சித் துறையில் திராவிட மொழிகளுக்கு முக்கிய இடம் உண்டு. தமிழ்ப் பகுதித் தலைவராக டாக்டர் ஆஷர் பணி புரிகிறூர். மலையாளம், கன்னடம் இந்த மொழிகள் பகுதியின் தலைவராக மிஸஸ் விட்லி என்ற பெண் மணி பணி புரிகிறூர். மொழியியலில் சிறந்த அறிவுடையவர் இவர். ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் வடமொழிப் பேராசிரியராகப் பணியாற்றும் மிஸ்டர் பர்ரோ என்பவர் திராவிட மொழியாராய்ச்சியில் ஈடுபாடு உடையவர். அவர், திராவிட மொழி அகராதி ஒன்றைத் தயாரிப்பதில் கவனம் செலுத்தி வருகிறூர்.

இந்தியாவின் இலக்கியம், பண்பாடு, கலை, வரலாறு முதலியவற்

(40-ஆம் பக்கம் பார்க்க)

நாடு முன்னேற வேண்டுமானல் பத்திரிகைகள் செழித்துவளரவேண்டும்!

குடியரசுத் தலைவர் கருத்துரை

நாட்டின் முன்னேற்றத்திற்கு சகல சக்திகளையும் ஒன்று திரட்டி மககளின் ஒத்துழைப்பு பெற வேண்டியது அவசியம். மக்களை உற்சாகப்படுத்தி ஊக்கமாகப் பங்கு கொள்ளச் செய்யும் இந்தப் பணியில் பத்திரிகைத் துறையினர் மிகப் பெரிய உதவி செய்ய முடியும் என்று இங்கு டாக்டர் ராஜேந்திரபிரசாத் கூறினர்.

இந்திய மொழிப் பத்திரிகைகள் வளர்ந்து அபிவிருத்தி யடைவது மிக மிக அவசியம் என்று குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் இன்று வற்புறுத்தினர். நாட்டு மக்களுக்கு எல்லா செய்திகளும் கிடைககவேண்டும் என்று நாம் விரும்பினல், கூடிய வரை பெருவாரியான மக்களுக்கு செய்திகளை எட்டும்படிச் செய்யும் முறையில் மொழி பத்திரிகைகளில் அபிவிருத்தி செய்தாக வேண்டும் என்று அவர் கூறினர்.

அகில இந்திய செய்திப் பத்திரிகை ஆசிரியர்கள் மகா நாட்டின் 14-வது வருடக் கூட்டத்தை அவர் துவக்கி வைத்து இம்மாநாடு நிச்சயம் அந்த வகையில் ஏதாவது செய்து ஆக்கமளிக்கும் என்று நம்புவதாகக் கூறினர்.

பத்திரிகை சுதந்திரத்தைக் காத்துப்பேணவேண்டும் என்றும் இது ஒன்றே ஜனநாயகத்தை ஒடுக்கப்பார்க்கும் தீமையான சக்திகளை முறியடிக்கப் போதுமானது என்றும் சொன்னர்.

ஜனநாயகத்தில் பத்திரிகைகளின் பொறுப்பு இரண்டு வகையில் மிக முக்கியமானது செய்திகளைத் தெரியப்படுத்துவதிலும், மக்களின் அபிப்பிராயங்களை உருவாக்குவதிலும் பத்திரிகைகளின் பணி மிக முக்கியமானது. இன்றைய விசேஷ சூழ்நிலையில் இநத பொறுப்பு மிக மகத்தானதாகிறது என்றார்.

நாட்டின் முன்னேற்றத்திற்காக பெரும் நிர்மான வேலைகளை மேற்கொண்டு சகல சக்திகளையும் ஒன்று திரட்டுவதில் முனைந்துள்ளோம். இவை எல்லாவற்றையும்விட மக்களின் ஒத்துழைபபு தான் மிக முக்கியம் என்றார்.

என்னதான் கவனமாகத்திட்டமிட்டுசெல்வாதாரங்களைத் திரட்டி நிர்மாண வேலைகளைச் செய்திட்டாலும் எல்லா குடி மக்களும் உற்சாகத்துடன் முன் வந்து அதில் பங்கு பெற்று உழைக்கவில்லையானல் வெற்றிகாண முடியாது என்று குடியரசுத் தலைவர் கூறினர். இந்தப் பணியில் பத்திரிகையைவிட எந்தத் துறை பெரிய

(45—ஆம் பக்கம் பார்க்க)

Edted, Priinted and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.